விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை (20.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123



புலிகளை ஒடுக்கப் பூரண ஆதரவு பிரிட்டன் இராஜாங்க அமைச்சர் உறுதி

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தமது நாடு தயாராக இருப்பதாக ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க அமைச்சர் டொனி மெக்னல்டி, இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ரோகித போகொல்லாகமிடம் உறுதியளித்துள்ளார்.

இருவருக்குமிடையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே ஐக்கிய இராச்சிய இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள், ஐக்கிய இராச்சியம் போன்ற மேற்குலக நாடுகளில் புலிகள் மேற்கொண்டு (10ஆம் பக்கம் பார்க்க)

ஜே.வி.பியின் கட்சி முரண்பாடு அரசாங்கமே முழுக் காரணம்

ரில்வின் சில்வா கருத்து

(கொழும்பு)

ஜே.வி.பியின் உட்கட்சி முரண்பாட்டிற்கு அரசாங்கமே காரணம் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். இரிதா லங்கா ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ச ஆகியோரே தமது கட்சியின் பிளவுக்கு காரணம் என்பது நம்பகரமான தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப் (10ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் மீது எனக்கு கோபம் இல்லை

பிரியங்கா நளினியிடம் தெரிவித்தாராம் வழக்கறிஞர் துரைசாமி பரபரப்புப் பேட்டி

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீது கோபமோ வெறுப்போ தமக்கு இல்லை என பிரியங்கா நளினியிடம் தெரிவித்துள்ளதாக அவரது வழக்கறிஞர் துரைசாமி கூறியுள்ளார்.விடுதலைப் புலிகளை ராஜீவ் காந்தி குடும்பம் மன்னித்து விட்டதென்பதை விடுதலைப் புலிகளிடம் நேரில் தெரிவிக்க முடியாத காரணத்தினாலேயே பிரியங்கா நளினியைச் சந்தித்து தமது மன்னிப்பை தெரிவித்தார் என்றும் நளினியின் வழக்கறிஞர் கூறியுள்ளார். அவர் கூறிய விபரங்கள் வருமாறு, (02 ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடம் தமது போர் நடவடிக்கைக்கு புலிகள் ஆதரவு கேட்கின்றனர்

பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக பொய்யான பிரசாரங்களைமுன்னெடுத்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாக பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது. கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பிலுள்ள ஐக்கிய நாடுகள் மனிதநேய விவகாரங்களுக்கான இணைப்பக அதிகாரிகளைச் சந்தித்து தமது போர் நடவடிக்கைகளுக்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆதரவு தர வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் ஏப்ரல் 7 ஆம் திகதி கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக தெரிவிக்கும் பாதுகாப்பு அமைச்சு இராணுவத்திடமிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை ஐக்கிய (10ஆம் பக்கம் பார்க்க)

தற்காலிக இணைப்பு மேலும் நீடிப்பு

(திருகோணமலை)

வெளிமாவட்டங்களில் பணிபுரிந்து அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மேலும் நான்கு மாதங்களுக்கு இணைப்பு நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேற்படி ஆசிரியர்களுக்கான தற்காலிக இணைப்பு ஆரம்பத்தில் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான முதலாம் தவணை வரைக்குமே வழங்கப்பட்டிருந்தது. எனினும் தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இரண்டாம் தவணை வரை தற்காலிக இணைப்பு நீடிக்கப்பட்டுள்ளதாக (10ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மங்களவுடன் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவிற்கும் சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவினருக்கும் இடையில் இரகசிய பேச்சுவார்த்தை ஒன்று பிரித்தானியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளர் ரிரான் அலஸ் ஆகியோருடன் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள்ளும் அரசாங்கத்தினுள்ளும் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகவும் இதனை கட்டுப்படுத்த உதவுமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மங்கள சமரவீரவை கோரியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் தீவிர அரசியல் விரோதியான அமைச்சர் (10ஆம் பக்கம் பார்க்க)

படையினர்-புலிகள் மோதல் படைத்தரப்பில் ஒருவர் பலி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்ற பல்வேறு மோதல் சம்பவங்களில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 9 படையினர் காயமடைந்துள்ளனர் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.இது தொடர்பாக படைத்தரப்பு வெளியிட்ட விபரம் வருமாறு,

மணலாறு, கிரிபன்வேவ வடக்கு, ஜனகபுர, ஆண்டான்குளம் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் 6 படையினர் காயமடைந்தனர். யாழ். கிளாலி முன்னரங்கப் பகுதியில் இடம் பெற்ற மோதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

மன்னார் சுலைனாமருதமடு பகுதியில் இடம்பெற்ற மோதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். மன்னாரில் கட்டைக் குளம், காத்தான் குளம், மணிப்புல் குளம் பகுதியில் இடம்பெற்ற மோதலில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

இதனிடையே (10ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் மீது...

கே: திடீரென்று சிறையில் இருக்கும் நளினியை பிரியங்கா சந்திப்பதற்கான காரணம் என்ன? இச்சந்திப்புக்கு முதலில் விருப்பம் தெவித்தது யார்?

ப: நளினியைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பியது பிரியங்காதான். அவரது விருப்பத்தின் அடிப்படையில்தான் சந்திப்பு நடந்துள்ளது. இந்தச் சந்திப்பின் மூலமாக பிரியங்கா முக்கியமான விஷயம் ஒன்றை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் நளினியிடம் சொன்ன அந்த முக்கியமான விஷயம், 'என் தந்தையைக் கொலை செய்தவர்கள் மீது எனக்கு கோபமோ வெறுப்போ விரோதமோ அறவே கிடையாது. அதைச் சொல்வதற்காகத்தான் நான் இங்கு வந்தேன்' என்பதுதான்.

ராஜீவ் கொலையைப் பொறுத்தவரையில் நளினி சிறிய கருவி மட்டும்தான். இக் கொலைக்கான சதியை அவர் தீட்டவில்லை. நீதிமன்றத்தின்படி கொலைக்கான சதியைச் செய்தவர்கள் விடுதலைப்புலிகள்தான். அக் கொலைத்திட்டம் நிறைவேறியபோது உடன் சென்றது மட்டும்தான் நளினி செய்த தவறு. இது பிரியங்காவுக்கும் தெரிந்திருக்கிறது.

அவரால் விடுதலைப்புலிகளை நேரில் சந்தித்து, 'உங்கள் மீது கோபமோ வெறுப்போ விரோதமோ கிடையாது' என்று சொல்ல முடியாது. அதனால்தான் அவர் நளினியைப் பயன்படுத்திக் கொண்டார். நளினியிடம் தன் கருத்துக்களைச் சொன்னதன் மூலம் பிரியங்கா தனக்கு ஆறுதலையும் நிம்மதியையும் தேடிக் கொண்டிருப்பதுடன், தன் மனதில் உள்ள மனிதநேயத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கே: அதற்காக விடுதலைப்புலிகளையும் பிரியங்கா மன்னித்துவிட்டார் என்று அர்த்தமாகுமா?

ப: உலகத்தில் எதற்கும் பழிக்குப்பழி வாங்குவதுதான் விஞ்சி நிற்கிறது. கொலைக்கு கொலை என்பதுதான் வாடிக்கையாக இருக்கிறது. ஆனால் தனக்கு அந்த எண்ணம் இல்லை என்கிறார் பிரியங்கா. இது மிகவும் உயர்ந்த பண்பு. மிகவும் பாராட்டுக்குரியது.

நளினியை தான் மன்னித்துவிட்டதாகவும் பிரியங்கா அச்சந்திப்பின்போது கூறியிருந்தார். மேலும், கொலை செய்தவர்களை மன்னித்து விட்டேன் என்றால் என்ன அர்த்தம்?

அவரது மன்னிப்பு என்பது நளினிக்கு மட்டுமல்ல, விடுதலைப்புலிகளுக்கும் உகந்ததாக இருக்க வேண்டும் என்று ஒரு ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியிலும்கூட கூறியிருந்தேன். அதைத்தான் இப்போதும் கூறுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் சோனியாவுக்கும் விடுதலைப்புலிகள் மீது கோபம் இல்லை என்றுதான் சொல்வேன். ஏனெனில் மகளுக்குக் கோபம் இல்லை என்றால் அது தாய்க்கும் பொருந்தும்தானே? அதேபோல் ராஜீவ் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் இதே கருத்தையே கொண்டிருப்பார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

கே: ராஜீவின் குடும்பம் புலிகளை மன்னித்துவிட்டது உண்மை என்றால், இந்திய அரசின் நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

ப: சோனியா காந்தியின் குடும்பத்தாருக்கே விடுதலைப்புலிகள் மீது கோபம் இல்லை என்றாகிவிட்ட பிறகு, இந்திய அரசும் அதை ஏற்கத்தான் வேண்டும். தங்களுக்கும் புலிகள் அமைப்பின் மீது கோபம் இல்லை என்பதை இந்திய அரசு வெளிப்படுத்த வேண்டும்.

இதுநாள் வரையில் பொதுவாக இந்திய மக்கள் விடுதலைப்புலிகள் என்றாலே கோபம் கலந்த வெறுப்புடன் பார்த்தார்கள். மக்களாகட்டும், காங்கிரஸ் கட்சியினராகட்டும் எல்லோருக்குமே இந்தக் கோபமும் வெறுப்பும் இருந்தது உண்மை. ஆனால் பிரியங்காவின் இந்த நடவடிக்கைக்குப் பிறகு அக்கோபம் ஏறத்தாழ மறைந்துவிட்டது. நளினியின் மீதான கோபம் மட்டும் பிரியங்காவிடம் மறைந்து விடவில்லை. விடுதலைப்புலிகள் மீதும் அவருக்குக் கோபம் இல்லை என்பதை நாளடைவில் எல்லோரும் புரிந்து கொள்வார்களீ. அப்போது அது நல்ல மாற்றமாக இருக்கும்.

கே: நளினியை சிறையில் சந்தித்தபோது பிரியங்காவுக்கு தனி அறை ஒதுக்கப்பட்டது என்றும், இது விதிமுறை மீறிய செயல் என்றும் கூறப்படுகிறதே? பிரியங்கா போன்ற முக்கியஸ்தர்களுக்கு இவ்வாறு விலக்கு அளிக்க முடியுமா?

ப: இந்த சட்டதிட்டங்களிலிருந்து யாருக்குமே விலக்கு அளிக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் தமிழக சிறைத்துறையினர் மிகுந்த கவனத்துடன் இருந்திருக்க வேண்டும். தன் தந்தையைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு சிறைத்தண்டனை அனுபவிக்கும் ஒருவரை பிரியங்கா சந்திக்கிறார். அவ்வாறு நேரில் சந்திக்கும்போது எந்தவொரு மனிதனுக்கும் ஆத்திரம்தான் முதலில் வரும். எவ்வளவுதான் கட்டுப்படுத்திக் கொண்டாலும், தன்னை மீறி ஆக்ரோஷம் அல்லது வேகம் வரும். அதுதான் பிரியங்கா விஷயத்திலும் நடந்தது. ஆனால் அவர் தன் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துகிறார் என்றால்.... நளினியைக் கண்டதும் அப்படியே உடைந்துபோய் அழுதுவிடுகிறார். பாரம்பரியமான பண்பான குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்பதால் அவருக்கு நளினியை திட்ட வேண்டுமென்றோ, அடிக்க வேண்டுமென்றோ துன்புறுத்த வேண்டுமென்றோ தோன்றவில்லை. அப்படியொரு எண்ணமே அவருக்கு இல்லை.

ஒருவேளை அவருக்கு தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த தெரியவில்லை என்றால் நளினியை அடித்திருக்கவும் வாய்ப்புண்டு. ஆனால் நல்லெண்ணத்துடன் அவர் வந்ததால் பண்பாக நடந்து கொண்டிருக்கிறார். அழுகை என்பது மனிதனின் மனப்பாரத்தை இறக்கிவிடக்கூடிய சக்தி பெற்றது. பிரியங்காவும் அழுகையின் மூலம் தன் மனப்பாரத்தை இறக்கி வைத்துவிட்டார்.

கே: நளினியிடம் பிரியங்காவும் விசாரணை மேற்கொண்டாரா? என்னவெல்லாம் கேட்டார்? கோபப்பட்டாரா?

நளினி

ப: விசாரணை நடத்தவில்லை. தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார். நளினியிடம் அவர் கேட்ட முதல் கேள்வி இதுதான்: 'எதற்காக என் தந்தையைக் கொலை செய்தீர்கள்?'.

இந்தக் கேள்வியை அவர் கோபமாக வெறுப்புடன் கேட்கவில்லை. மாறாக உணர்ச்சிகளைக கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாகக் கேட்டிருக்கிறார்.

கே: இருவரும் பூட்டப்பட்ட அறைக்குள் பேசியதாக வெளியான தகவல் உண்மையா?

ப: அரசாங்கம் செய்தது தவறு. இருவரும் சந்தித்துப் பேசிய அறை பூட்டப்பட்டிருந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. எனினும் இத்தகைய சந்திப்புகளின்போது சட்ட விதிகள் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை என்றால் அது சட்ட மீறல்தான் மிகவும் தவறுதான்

வழக்கமாக கைதிகளிடமிருந்து சில ரகசியமான தகவல்களைப் பெறுவதற்காக அவர்களது வழக்கறிஞர்கள் சந்திப்பது உண்டு. அத்தகைய சந்திப்புகளின்போது கைதியும் அவரது வழக்கறிஞரும் பேசும்போது, அவர்கள் பேசுவது காதில் விழாத தூரத்தில் நின்று சிறை அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்பதுதான் விதிமுறை.

ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட பேரறிவாளனை கடந்த 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிறப்புப் புலனாய்வு அலுவலகமான மல்லிகையில் நான் சந்தித்துப் பேசியபோது இந்த நடைமுறைதான் கடைபிடிக்கப்பட்டது.

அந்த அலுவலகத்துக்குள் சென்ற முதல் வழக்கறிஞர் நான்தான். அப்போது அதிகாரிகள் உடன் இருந்தனர். ஆனால் நாங்கள் இருவரும் பேசுவது காதில் விழாத தூரத்தில் நின்றுதான் கவனித்தனர். அந்த விதிமுறை பிரியங்கா, நளினி சந்திப்பில் பின்பற்றப்படவில்லை என்பது தவறுதான்.

கே: தான் எழுதும் புத்தகத்துக்கு தேவைப்படும் சில விவரங்களைச் சேகரிப்பதற்காக நளினியை சந்தித்திருக்கிறார் பிரியங்கா. இதற்கும் மனிதநேயத்திற்கும் என்ன சம்பந்தம்?

ப: ஏன் இல்லை...? சினிமாவில் வேண்டுமானால் தன் தந்தையைக் கொன்றவர்களை மன்னிப்பது சாத்தியமாகலாம். ஆனால் வரலாற்றில் இதுபோன்ற சம்பவங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் சொல்கிறேன் பிரியங்கா செய்தது மகத்தான காரியம்.

'மனோகரா' படத்தில் நடிகர் சிவாஜி கணேசன் படையெடுத்துச் சென்று பாண்டிய மன்னனை வீழ்த்தி அவரைக் கொன்றுவிடுவார். ஆனால் அடுத்த காட்சியிலேயே மன்னனின் மகளைக் கைபிடிப்பார். இதெல்லாம் நிஜத்தில் சாத்தியமாகுமா? ஆனால் பிரியங்கா இதைச் சாதித்துக் காட்டியிருக்கிறார்.

உதாரணத்துக்கு நான் சந்தித்த ஒரு வழக்கைச் சொல்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் ஒருவரது தந்தையை மூன்று பேர் சேர்ந்து கொன்றுவிட்டனர். வழக்கு நீதிமன்றம் சென்றது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு மூவரும் குற்றம் செய்யவில்லை என்று விடுவிக்கப்பட்டனர். ஆனால் மகனால் இத்தீர்ப்பை ஏற்க முடியவில்லை. தன் தந்தையைக் கொலை செய்தவர்கள் மூன்று வருடச் சிறைவாசம் முடிவதற்குள் வெளியே வந்துவிட்டனரே என்று கோபப்பட்டார். தன் தந்தையின் அடுத்த நினைவு நாளன்று அம்மூவரையும் வெட்டிக் கொன்றுவிட்டு அவர்களது தலையை எடுத்து வந்து தன் தந்தையின் சமாதியின் மீது வைத்து பூஜை செய்து கோபத்தை தணித்துக் கொண்டார். அப்படிப்பட்ட பூமியில் தன் தந்தையைக் கொன்றவர்களிடம் பரிவு காட்டுவதென்பது உயர்ந்த செயல.

கே: இருவரும் என்னென்ன பேசினார்கள். தன்னை சிறையிலிருந்து விடுவிக்குமாறு நளினி கோரினாரா?

ப: இல்லை... அத்தகைய கோரிக்கை எதையும் நளினி முன்வைக்கவில்லை. ஆனால் இருவரும் மனம்விட்டுப் பேசியது உண்மை. நளினியின் சிறைவாசம் குறித்தும், தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், வாழ்க்கைத்தரம் என எல்லாவற்றையும் கேட்டறிந்திருக்கிறார் பிரியங்கா. தன்னைப் பற்றியும் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார். இருவரும் சுமார் ஒருமணி நேரம் பேசியது பெரிய விஷயம். பிரியங்காவுக்குக் கோபம் இருந்திருக்குமானால் அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு இவ்வளவு நேரம் பேசியிருக்க முடியாது. ஏனெனில் வருடக் கணக்கில் பொறுமையுடன் தவம் செய்த முனிவர்களே பொறுமை இழந்து சாபமிட்ட கதைகளைக் கேட்டிருக்கிறோமே?

கே: பிரியங்காவிடம் நளினி மன்னிப்பு கேட்டது உண்மைதானா? அதற்கு பிரியங்கா என்ன சொன்னார்?

ப: பிரியங்கா அழுததும் நளினியும் சிறிது நேரம் அழுதிருக்கிறார். பிறகு நான் செய்த பாவத்துக்காக என்னை மன்னித்துவிடுங்கள் என்று கேட்டிருக்கிறார். எந்தக் குடும்பத்திற்கு எதிராக தான் தவறு செய்துவிட்டோம் என்று நினைத்தாரோ, அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரிடமே மன்னிப்பும் கேட்டுவிட்டார். அவர் மனதில் இருந்தது வார்த்தைகளில் வெளிப்பட்டுவிட்டது. பிரியங்காவும் அதைப் பெருந்தன்மையாக ஏற்றுக் கொண்டார்.

DONT WORRY. I'VE ALREADY FORGOTTEN EVERYTHING என்று கூறியிருக்கிறார்.

கே: இச்சந்திப்புக்குப் பிறகு நளினி விடுதலையாகும் வாய்ப்புள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அது சாத்தியம்தானா?

ப: பொதுவாக இந்திய சட்டப்படி ஆயுள் தண்டனை என்பது பத்து வருடம்தான். கொலைக்குற்றத்துக்காக தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அது ஆயுள் தண்டனையாக மாற்றப்படும்போது குறைந்தபட்சம் பதினான்கு வருட சிறைவாசம் பெறுவர். பின்னர் அரசாங்கம் பார்த்து விடுதலை செய்யலாம்.

நளினியோ அதற்கு மேலாக சுமார் பதினேழு வருடங்கள் சிறையில் இருந்துவிட்டார். இந்தியாவில் எந்தவொரு பெண்மணியும் இவ்வளவு காலம் சிறையில் இருக்கவில்லை. எனவே அவரை விடுவிக்க வேண்டும் என்று சட்டரீதியாகப் போராடி வருகிறேன். விரைவில் என் முயற்சிக்குப் பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவரே குற்றம் சாட்டப்பட்டவரை நேரில் வந்து சந்தித்துப் பேசி ஆறுதலும் கூறி சென்றிருக்கிறார். எனவே நளினி விடுதலையாவதால் வேறு யாருக்கும் எந்தத் தீங்கும் ஆபத்தும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே அவரை விடுதலை செய்வதற்கு அரசு தயங்கக்கூடாது என்பதே என் கருத்து.

கே: நளினியின் குடும்பத்தார் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதாகவும், ஏழ்மையில் வாடுவதாகவும் வெளியான தகவல்கள் குறித்து?

ப: நளினியின் தாய் குடியிருக்க வீடு கூட கிடைக்காமல் அவதிப்படுகிறார். அவர் வீடு தேடிச் செல்லும்போதெல்லாம் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர் என்று கூறி வாடகைக்கு விட மறுக்கிறார்கள். ஒருவேளை விவரம் தெரியாமல் முதலில் வீடு கொடுத்தாலும், பின்னர் விவரம் தெரியும்போது வீட்டைக் காலி செய்யுமாறு நிர்பந்திக்கிறார்கள்.

அதேபோல் நளினியின் அண்ணனுக்கு நிரந்தரமாக ஒரு உத்தியோகம் இல்லை. எங்கு வேலைக்குச் சென்றாலும் அவரைக் குற்றவாளியாகப் பார்த்து வேலை தர மறுக்கிறார்கள். நளினியின் தாயும், சகோதரரும் தவறு செய்யவில்லை என்று நீதிமன்றமே கூறிவிட்ட போதிலும், மக்கள் அதை ஏற்கவில்லை. அவர்கள் மத்தியில் ராஜீவ்காந்தி கொலையால் ஏற்பட்ட பாதிப்பும் வெறுப்பும் இன்னும் மறையாமல் இருந்ததே இந்நிலைக்கு காரணம். ஆனால் பிரியங்காவின் சந்திப்புக்குப் பிறகு நிலைமை மாறும் என்று எதிர்பார்க்கலாம்.

கே: நீதிமன்றமே நளினி தரப்பில் குற்றம் நடந்திருப்பது உண்மை என்று கருதி அவருக்கு தண்டனை வழங்கியிருக்கிறது. அப்படியிருக்க நளினியை விடுவிக்க வேண்டும் என்று எந்த அடிப்படையில் நீண்ட காலமாகப் போராடி வருகிறீர்கள்?

ப: உண்மையில் பேரறிவாளனுக்காகத்தான் இந்த வழக்கில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். அதன் பிறகு ஒவ்வொருவருக்காகவும் வாதாடினேன். முதலில் விடுதலைப் புலிகள் இந்தத் தவறைச் செய்திருக்கமாட்டார்கள் என்று நான் நினைத்தேன். ஏனெனில் இப்படியொரு காரியத்தைச் செய்தால் அவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். அதனால் அவர்களால் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்க முடியாது எனக் கருதினேன்.

நளினி தவறு செய்தார் என்பது சரியல்ல. நான முன்பே குறிப்பிட்டதுபோல அவர் வெறும் கருவிதான். சதியை அரங்கேற்றிய சிவராசன், தணு, சுபா ஆகியோருடன் உடன்சென்றது மட்டும்தான் அவர் செய்த காரியம். மேலும் விடுதலைப்புலிகள் எதையும், எப்போதும் ரகசியமாக தங்கள் மேலிடத்தின் கட்டளைளை ஏற்றுச் செயல்படுத்தக்கூடியவர்கள். எதையும் ரகசியமாகச் செய்வதில் புலிகளுக்கு நிகர் அவர்கள்தான். நாங்கள் இன்னதுதான் செய்யப் போகிறோம் என்று யாரிடமும் சொல்லிவிட்டுச் செய்யக்கூடியவர்கள் அல்ல. எனவே தான் நளினிக்கு ராஜீவ் கொலை விஷயம் தெரிந்திருக்காது என்று உறுதியாக நம்பினேன் அந்த அடிப்படையில்தான் அவருக்காகப் போராடி வருகிறேன்.

கே: ராஜீவ் கொலையால் தமிழகமே கொந்தளித்துப் போயிருந்த நேரத்தில் நளினிக்காகக் குரல் கொடுத்திருக்கிறீர்கள். இதனால் உங்களுக்கு ஏதும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டனவா?

ப: ஒன்றா இரண்டா... எதைச் சொல்வது? நீதிமன்றத்தில் என்னைப் போலவே தோற்றம் கொண்ட சக வழக்கறிஞர் ஒருவரை காங்கிரஸ் கட்சியினர் அடித்து உதைத்தனர். சந்தர்ப்பவசத்தால் நான் தப்பித்தேன். அவர் சிகிக் கொண்டார். அந்நாட்களில் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களைப் பற்றி பேசினாலே அடிதது உதைக்கும் அளவுக்கு மக்கள் ஆவேசமாக இருந்தனர். சிறப்புப் புலனாய்வு அலுவலகத்துக்கு சென்றுவிட்டு பிறகு உயிருடன் வீடு திரும்புவேனா என்பதுகூட சந்தேகம் என்கிற நிலை காணப்பட்டது. பலமுறை என் வீட்டின் மீது கல்வீச்சு சம்பவம் நடந்துள்ளது.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து ஜெயலலிதா அரசாங்கம் அமைந்தது. அத்தகைய தொரு கடுமையான மாநில அரசாங்கம், புலிகளுக்கு எதிராகச் செயல்படும் மத்திய அரசாங்கம், இரும்புக்கரம் கொண்டுள்ள சிபிஐ என அனைத்தையும் மீறி தைரியமாகச் செயல்பட்டேன். இத்தனை போராட்டங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் என் குடும்பத்தார் என் விருப்பப்படி செயல்பட முழு ஒத்துழைப்பை நல்கி வந்தனர்.

கே: நளினி விடுதலை செய்யப்பட வேண்டுமென வேறு சில அமைப்புகளும் கட்சிகளும் கூட தமிழகத்தில் குரல் கொடுத்தன. அப்படிப்பட்டவர்களில் யாராவது இது தொடர்பாக நீங்கள நடத்தி வரும் வழக்குகளை தொடர்ந்து நடத்த பொருளாதார ரீதியில் உதவி செய்திருக்கிறார்களா?

பிரியங்கா

ப: யாரும் சல்லிக்காசு கூட தரவில்லை. இதுதான் உண்மை. எல்லோருமே தங்களின் ஆதாயத்துக்காக, இந்த விவகாரம் பற்றி பேசினால் தங்களுக்கு பெயர் கிடைக்கும் என்பதற்காகத்தான் பேசினார்களே தவிர, உண்மையில் யாருக்கும் நளினி விவகாரத்தில் அக்கறையே இல்லை. சரி... பணம் கூட தரவேண்டாம். குறைந்தபட்சம் தார்மீக அடிப்படையில் ஒரு அறிக்கையாவது வெளியிட்டிருக்கலாம். அதைக்கூட யாரும் செய்யவில்லை. நளினியை போலீஸார் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று நான் கூறியபோதும்கூட யாரும் இதற்காகக் குரல் கொடுக்கவில்லை என்பது வேதனையான உண்மை.

கே: தமிழ்ச்செல்வன் இறந்தபோது கூட தமிழக முதல்வர் கருணாநிதி இரங்கல் கவிதை எழுதினார். அவர் புலிகள் மீது மறைமுகமாக பற்று கொண்டவர் என்கிற விமர்சனம் உண்டு. அது குறித்து?

ப: கலைஞர் மரியாதைக்குரிய ஒரு தலைவர். தமிழன் என்கிற இன உணர்வும், திராவிட உணர்வும் அவரது ஆழ்மனதில் பதிந்திருக்கிறது. ஆனால் அந்த உணர்வை அரசியல் எனும் மற்றொரு உணர்வைக் கொண்டு மூடி வைத்திருக்கிறார். எனினும் தமிழ்ச்செல்வனின் மறைவு போன்ற சம்பவங்கள் நிகழும்போது அவரையும் அறியாமல் அரசியல் என்பது மறைந்து, திராவிடமும் இன உணர்வும் மேலோங்கி இப்படிப்பட்ட கவிதைகளை எழுதுகிறார்.

இப்படிக் கவிதை எழுதிய அடுத்த நாளே தன் அரசாங்கத்தின் சார்பாக ஒரு அறிவிப்பை வெளியிடுகிறார். தமிழ்ச்செல்வனுக்கு யாரும் இரங்கல் கூட்டம் நடத்தக்கூடாது என்று அறிவிக்கிறார். மேலும் திமுகவைப் பொறுத்த வரையில் விடுதலைப்புலிகளைப் பற்றி பேசினால் நமக்கு தொந்தரவுதான் மிஞ்சும் என்று நினைப்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகம்.

கே: ராகுலைப் பிரதமராக்குவதற்கும், தங்கள் குடும்பம் மனிதநேயமிக்கது என்பதைப் பறைசாற்றிக் கொள்ளவும்தான் நளினியை பிரியங்கா சந்தித்திருக்கிறார் என்றும், இதன் மூலம் அக்குடும்பம் அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறது என்றும் கூறப்படுவது குறித்து?

ப: எந்த நோக்கத்துக்காக இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது என்பதை ஆராய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. எல்லோரும் அதை மறந்துவிடுவது நல்லது. மாறாக பிரியங்காவின் செயலைப் பாராட்ட வேண்டும் என்பதுதான் என் கருத்து. தன் தந்தையைக் கொன்றதாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை அனுபவிக்கும் ஒருவரைச் சந்தித்து சகஜமாகப் பேசுவதும், அவரை மன்னித்துவிட்டதாகச் சொல்வதும் ஒப்பீடு செய்ய முடியாத அளவு மகத்தான காரியம்.

அரசியல் தீர்வு தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு மாற்றமடையக்கூடும்

ஜே.வி.பியின் பிளவின் மூலம் அரசியல் தீர்வு தொடர்பான அக்கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் வரலாம் என்று ஜெகான் பெரேரா தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கட்ந்த செவ்வாய்க் கிழமை கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மீரர் நாளேட்டில் ஜே.வி.பியின் பிளவு குறித்து அவர் எழுதிய கட்டுரையில் கூறியுள்ளதா வது,

ஜே.வி.பியின் பிளவு குறித்து கடந்த வாரம் வெளியான செய்திகள் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எனினும் கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுவதாக பல மாதங்களுக்கு முன்பிருந்தே ஊடகங்கள் செய்தி வெளியிட் டன. இதனை கட்சிப் பிளவு என்று குறிப்பிடு வதனைவிட கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கு இடையிலான அதிகாரப் போராட்டமா கவே கருதத்தோன்றுகிறது.

ஜே.வி.பியின் அரச தலைவர், வேட்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நந்தன குணதிலக்க ஒரு வருடத்திற்கு முன்னர் கட்சியிலிருந்து விலகி அதிகாரபூர்வ மற்ற வகையில் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றார்.

எனினும் இந்த நிலைமை கட்சிக்குள்ளோ கட்சிக்கு வெளியேயோ அதிர்வுகளை ஏற் படுத்தவில்லை.

எனினும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் மற்றும் நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச கட்சியை விட்டு விலகிச் செயற்பட்டமை அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது உணர்வுபூர்வமான பேச்சாற்றலின் மூலம் பொதுமக்களின் உணர்வலைகளை மாத்திரமன்றி மொத்தமாக 38 பேரைக் கொண்ட ஜே.வி.பி உறுப்பினர்களில் பத்து உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள விமல் வீரவன்சவிற்கு முடிந்துள்ளது.

இந்த எண்ணிக்கையின் மூலம் கட்சி உறுப் பினர்களிடையே காணப்பட்ட முரண்பாடுகளும் கட்சியின் மீது அவர்கள் காட்டி வந்த விசுவாசமும் வெளிப்படுகின்றது.

தனியான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாக விமல் வீரவன்ச தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சுப் பதவிகள் மற்றும் ஏனைய வரப் பிரசாதங்களை வழங்காது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த வாய்ப்பாக அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு இதனை நோக்குகின்றது.

ஜே.வி.பியின் இரண்டு குழுக்களும் கடுமையான குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளமையினால் மீண்டும் இணைந்து செயற் படக்கூடிய சாத்தியங்கள் மிகக்குறைவாகவே காணப்படு கின் றது. முறைகேடான நிதியியல் கொடுக்கல் வாங் கல்களே கட்சியில் ஏற்பட் டுள்ள பிளவுக்கு பிர தான ஏதுவாக அமைந்ததாக ஊட கங்கள் தெரிவிக்கின் றன.

விமல் விரவன்சவிற்கு எதிராக நிதி மோசடி உள்ளிட்ட மிகக் கடுமையான குற்றச் சாட்டுக்கள் காணப்படுவதாக ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஊடகங் களிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசாங்கத்துடனான நெருக்கமே இந்த முறு கலுக்கு பிரதான ஏதுவாக குறிப் பிடப்படுகிறது. 2005 ஆம்ஆண்டு அரச தலைவருக்கான தேர்தலின் போது மஹிந்தவை வெற்றி கொள்ளச் செய்ய முனைப்புடன் செயலாற்றியவர்களில் விமல் வீரவன்ச முக்கியமான இடத்தை வகிக்கின்றார்.

சிங்களதேசிய வாதக் கொள்கைகளையும், மேற்குலகம் தொடர்பாக காட்டிய வெறுப் புணர்ச்சியையும் பெரும் பான்மை மக்களின் வாக்குகளை வேட்டையாடும் ஆயுதங்களாக விமல் வீரவன்ச பயன் படுத்தினார்.

மேற்குலக ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்புக்களை நடத்துவ தற்கு முன்னர் 1505ஆம் ஆண்டு முதல்காணப்பட்ட தேசத்தை மீண்டும் கட்டி எழுப்ப மஹிந்தராஜ பக்ஷவுடன் அணிதிரளுமாறு விமல் வீரவன்ச தேர்தல் பிரச்சாரங்களின் போது மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

மேற்குலக சக்திகளின் சதிகாரணமாக மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் மண்டியிட நேர்ந்துள்ளதாக அவர் தேர்தல் பிரச்சாரங்களின் போது வீராவேச மாக கூச்சல் இட்டார்.

ஜே.வி.பியின் கொள்கை

ஜே.வி.பி கீழ்மட்ட சிங்கள பெரும் பான்மை மக்களது உணர்வுகளுக்காக குரல்கொடுக்கும் கட்சியாகவே ஆரம்பம் முதல் திகழ்ந்து வந்தது.

1960களின் கம்யூனிச கட்சிகளில் இருந்து ஜே.வி.பி உருப்பெற்றது. கிராமப் புற இளைஞர்கள் மத்தியில் நிலவிய தொழில் வாய்ப்பின்மை விரக்தியின் காரணமாக கட்சிக்கு ஆதரவுபல்கிப் பெருக தொடங்கியது பல் கலைக்கழக இளைஞர்களின் ஆதரவையும் ஜே.வி.பி பெற்றுக்கொண்டது.

1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி ஒரு ஆயுதக் குழுவாக உருப்பெறத் தொடங்கியது. பல் வேறு வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் இராணுவத்தினர் ஜே.வி.பியினரின் கிளர்ச்சியை கட்டுப்படுத்தினர்.

1977 முதல் 1983வரையான காலப் பகுதியில் மீண்டும் ஜே.வி.பி தனது செயற் பாடுகளை ஆரம்பிக்கத் தொடங்கியது.ஜே.வி.பி யின் தலைவர் விடுதலைசெய்யப்பட்டதன் பின்னர் அந்த அமைப்பு இரகசியமாக செயற்படத் தொடங்கியது. 1987ஆம் ஆண்டு இந்திய -இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக கிளர்ச்சி யில் ஈடுபட்டது.

1980களில் ஜே.வி.பி தமிழ் மக்களது சுயாட்சி அதிகாரங்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையையே கடைப் பிடித்தது. குறிப்பாக மார்சிச வாத கொள்கைகளின் அடிப் படையில் சிறுபான்மையினரது உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் காணப்பட்டது.

இந்தக் கொள்கைகளின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உறவுகளை பேணுவதற்கு இலகுவாகக் காணப்பட்டது 80-களில் ஜே. வி.பியினரால் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சிகளின் போது தமிழீழ விடுதலைப்புலிகளிட மிருந்து ஆயுதங்கள் கிடைக் கப்பெற்றதாக குற்றஞ் சாட்டப் பட்டது.

சிறுபான்மையினம் தொடர்பான கரிசனை!

எனினும் ஜே.வி.பி ஒரு சிங்கள பேரினவாத சக்தியாகவே பெரும்பாலும் நோக்கப்படுகிறது. மறுபுறத்தில், சமூகத்தில் அடிமட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற நிலைப் பாட்டை தக்கவைத்துக் கொள்ள சில நேரங்களில் சிறுபான்மை சமூகம் தொடர்பான கரிசனை களையும் வெளியிடும் ஒருகட்சியாக ஜே.வி.பி அரசியல் வட்டாரத்தில் நோக்கப்படுகிறது.

2004ஆம் ஆண்டு ஆழிப் பேரலை அணர்த்தத்தின் போது கிழக்கில் முஸ்லீம் சிறுபான்மை யினர் பெருமளவில் வாழும் பிரதேசங்களில் ஜே.வி.பி பல நிவாரணத் திட்டங்களை முன்னெடுத்தது.

அரசாங்கம் மற்றும் தன்னார் வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புக்கு நிகரான பங்களிப்பை ஜே.வி.பி முன்னெடுத்தது என குறிப்பிடலாம்.

இந்த உதவிகளின் மூலம் அந்த பிரதேச முஸ்லிம் மக்களின் நல்லபிப்பிராயத்தை ஜே. வி.பியினால் பெற் றுக்கொள்ள முடிந்தது.

சிறுபான்மை சமூகத்திற்காக குரல் கொடுத்த மற்றுமொரு சந்தர்ப்பமாக 2007 ஆம் ஆண்டு யூன்மாதம் கொழும்பில் தற் காலிகமாக தங்கிவாழ்ந்த தமிழர்களை கொழும் பில் இருந்து அகற்ற அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகளுக்கு ஜே.வி பி. எதிர்ப்புத் தெரி வித்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள்கொழும்பில் தாக்குதல்களை நடத்தியதன் பின்னரே ஜே.வி. பியினரால் எதிர்ப்புக் குரல் கொடுக் கப்பட்டது என்பது நோக்கத்தக்கது.

மறுபுறத்தில், அரசாங்கத்தினால் முன் னெடுக்கப்படும்அனைத்து இராணுவ நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வரும் ஜே.வி.பி கொழும்பில் இருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்குத் தமது கடும் எதிர்ப்பைத்தெரிவித்தனர்.

ஜே.வி.பியின்இந்த எதிர்ப்புக் குரல் மற்றும் சிவில் அமைப்புக்களின் கடுமையான எதிர்ப்பு என்பவற்றின் காரணமாக அரசாங்கம் தனது உத்தரவை பின்வாங்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மீள சிந்திக்கும் சாத்தியப்பாடு

தமிழ் மக்கள் கொழும்பில் இருந்து பலவந்தமாக அகற்றப்பட்டபோது விமல் வீரவன்ச அதற் கெதிராகக் குரல் கொடுக்கவில்லை என்பது அவர் மீதான பிரதான குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும் அரசாங்கத்தில் இந்த நடவடிக்கையை கண்டித்து ஜே.வி.பி யினரால் விடுக்கப்பட்ட தண்டனை அறிக்கையை வேறொரு ஜே.வி பிநாடாளுமன்ற உறுப்பினரே நாடாளு மன்றத்தில் வாசித்தார்.

இதன் மூலம் அரசாங்கத்திற்கும் விமல் வீரவன்சவிற்கும் இடையிலான பிணைப்பு புலப்படுகிறது.

சிங்களதேசிய வாதக் கொள்கைகளை உச்ச அளவில் பயன்படுத்தி ஏனைய மூத்த தலைவர்களை காட்டிலும் சிங்கள மக்களிடையே செல்வாக்குப் பெற்றுக்கொண்டார்.



கடும் சிங்களத் தேசியவாத அமைப்பான தேசப்பற்றாளர் அமைப்பின் நிறுவன உறுப்பினராக விமல் வீரவன்ச செயற்படுகின்றார். இந்த அமைப்பு இலங்கையின் தேசியப் பிரச் சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என்ற கொள்கையை முன்னெடுக்கின்றது.

ஜே.வி.பி.அதிருப்தியாளர்கள் உருவாக அரசாங்கமே காரணம் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டின் மூலம் அர சாங் கத்தின் மீதான விமல் வீரவன்ச வின் கரிசனைகள் மிகவும் தெளிவாகின்றது.

அரசியல் ஆய்வு
ஜெகான் பெரேரா

மாக்சிச வரலாற்றுப் பின்னணியுடைய ஜே.வி.பியின் செயற்பாடுகள் குறித்து மிகவும் பலம் பொருந்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பல தடைவைகள் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

விமல் வீரவன்சவின் பிளவு தற்காலிகமாக ஒன்றாக அமைகிறதோ இல்லையோ, ஜே. வி. பி. சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கக் கூடிய சரியான தீர்வுத் திட்டங்களை கண்டறிய வேண்டும்.

இதவரையில் ஜே.வி.பி அதிகாரப் பரவலாக்கல் தீர்விற்கு மாத்திரமே ஓரளவு இணக் கம் தெரிவித்துள்ளது. 13 திருத்தம் உள்ளிட்ட ஏனைய அனைத்து தீர்வுத்திட்டங்களுக்கும் ஜே.வி.பி. தனது எதிர்ப்பையே தெரிவிக்கின்றது.

அரசியல் சாசன திருத்தத்தின் மூலம் பரிந் துரைக்கப்பட்டுள்ள சுயாட்சி அதிகாரங்களுக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதன் மூலம், இராணுவத் தீர்வையே ஜே.வி.பி. விரும்புகின்றது என்பது புலனாகின்றது. மறுபுறத்தில் அனைத்து பொதுமக்களினதும் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி. தலைவர்கள் குரல் கொடுக்கின்றனர்.

மிக மெதுவான போர் முன் நகர்வுகளினால் பாரியளவிலான பாதிப்புகளை தமிழர்களும், இந்த பொருளாதாரமும் தாங்கிக் கொள்ள நேரிடும் என்பது திண்ணம்.

இதனால் ஜே.வி.பி.மரபு வழியான மார்க்சிச கொள்கைகளுக்கு முன்னுரிமை அளித்து அரசியல் ரீதியான தீர்வொன்றினை நோக்கிச் செல்வது சாலச் சிறந்தது என்று அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. *

என் சோதிடம்

எண் -8 (சனி)

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்தத் தேதிகளில் (8, 17, 26) பிறப்பவர்கள் எல்லோரும் எளிய குடும்பங்களில்தான் பிறப்பார்கள் என நேயர்கள் நினைக்க வேண்டாம். மிதமிஞ்சின ஐஸ்வர்யமுடைய பிரபுக்களாகவும் இந்த ஆதிக்கர் தோன்றுவதுண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தாலும் தன்னைச் சுற்றியிருப்பவர்களெல்லாம் கோலாகலத்துடன் இருக்க இவர் மாத்திரம் ஒருவருடனும் சேராமல் நெஞ்சில் கவலையும், ஏக்கமுங்கொண்டு தன்னைப்பற்றியே நினைத்து ஒதுங்கியிருப்பார்.

செல்வந்தராகப் பிறக்கும் இவர்கள் சூழ இருப்பவர்களையெல்லாம் தாராளமாகச் செலவுசெய்து சந்தோஷமாக இருக்கச் செய்வார்கள். தன்னை மற்ற உலகத்தாரில் ஒருவராக எண்ணாமல் இருப்பதுதான் இவர்களிடம் காணப்படும் குறைபாடு. நண்பர்கள் இவர்களைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு இவர்களது கூச்சத்தை நீக்கி சகஜமாக யாவருடனும் பழகும்படி செய்துவிட்டால் கூர்மையான அறிவினாலும் நல்லெண்ணத்தினாலும் இவர்கள் யாவரையும் வென்று புகழடைவார்கள்.

எழுத்து - எட்டு

பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்களைக் கூட்டிய தொகை 8 ஆக வருமானால் இந்த எண்ணின் ஆதிக்கம் உண்டாகிவிடும். தனித்தனியே 8 வரும் எண்களின் பலனைக் குறிக்குமுன் சில பொதுவான அம்சங்களைக் கூறுகிறேன்.

பிறந்த தேதி எண், தேதி, மாதம், வருஷம், கூட்டிவரும் எண் இவையிரண்டும் அதிர்ஷ்டகரமான எண்களாக இருந்தால் 8 எண் வரும் பெயர் அதிர்ஷ்டத்தைக் குறைப்பதோடு நின்றுவிடும். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் தாமதங்கள் ஏற்படும். (சனிக்கு மந்தன் என்றும் பெயர் உண்டு). இந்த எண் வருகிறவர்களுக்கு நடுத்தரமான திருப்தியளிக்கக்கூடிய சுகவாழ்க்கை ஒருநாளும் அமையாது.

வாழ்க்கை வறுமை, கஷ்டங்கள், தோல்விகள் நிறைந்ததாக இருக்கும். இல்லாவிடில் செல்வம், செல்வாக்கு, பெருத்த அதிகாரம் உடையதாய் வெற்றிக்குமேல் வெற்றியாய் வரும். பெரும் பதவிகள் வகிக்கும் போதும் (வெளிப்பார்வைக்கே அதிர்ஷ்டகரமாகத் தோன்றும்) எதிர்பாராத விரோதங்களும், சிக்கல்களும், பயப்படவேண்டிய பொறுப்புகளும் ஏற்பட்டு சுகப்பட முடியாமல் செய்யும் (சனி இவர்களை மற்றவர்களை வருத்தும் படியாகவும் தண்டிக்கும்படியாகவும் செய்தே இவர்களது அந்தஸ்தை உயர்த்துவார். தின சரி நாற்பது பேர்களுக்காவது தண்டனை விதிக்கும் மாஜிஸ்ரேட் முதலியவர்களை இப் பெயரில் காணலாம்).

நோயோ மற்ற கவலைகளோ இவர்களை வாட்டிய வண்ணமிருக்கும். ஏதாவதொரு பெரியகுறை இல்லாமல் இவர் இருக்க முடியாது. சிலர் விவாகமே வேண்டாமென்று இருப்பார்கள். வேறு சிலர் விவாகம் புரிந்து கொண்டு அவதிப்படுவார்கள். இன்னும் எவ்வளவோ? ஆகையால் நீங்களோ அல்லது உங்களைச் சார்ந்தவர்களோ இவ் வெண் குறிக்கும் பெயருடையவராக இருந்தால் முதற்காரியமாக அதை மாற்றிக் கொள்ளவும். வீடு, வியாபாரஸ்தலம் முதலியவைகளும் இந்த எண் கொண்டதாக இராமல் பார்த்துக் கொள்ளவும்.

8. இவ்வெண் பெயராக உடையவர் ஆத்மீக வாழ்க்கையில் பெரும் முன்னேற்றத்தை அடைவார். இச்சைகளும் இலேசில் கட்டுப்படாமல் வெற்றி தாமதப்பட்ட வண்ணமிருக்கும். பெரும் போராட்டத்திற்குப் பிறகு வெற்றி ஏற்படும். எதிர்பாராத ஆபத்துக்கள், சங்கடங்கள் உண்டு.

17. பெயர் இந்த எண்ணாக வந்தால் அரசுத்தன்மை உண்டாகும். பூர்ணமாக சுக்ர ஆதிக்கம்போல் தோன்றுவதால் சில பழைய நூல்களில் இதை சுக்ரனைச் சார்ந்ததாக வர்ணித்து இருக்கின்றனர் (ஜோதிடம் அறிந்தோர் சனி, சுக்ரனது வீடாகிய துலா ராசியில் உச்சமாக இருப்பதை உணர்வர்.) ஆனால் இது சனி பூர்ண பலத்துடன் விளங்குவதையே குறிக்கிறது. இவ் வெண்ணைப் பெயராக உடையவர் பலவிதமான கஷ்டங்களுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாவார்கள். ஆனாலும் மறுபடி மறுபடி சளைக்காமல் போராடுவார்கள்.

(சொட்டிய ரத்தத் துளிகளிலிருந்து இராக்கதர்கள் தோன்றியதாகப் படித்திருக்கலாம்). தோல்வியை அலக்ஷ்யம் செய்து மீண்டும் போரிடவல்லவர் இவர் ஒருவரே. முடிவில் எல்லா எதிர்ப்புகளையும் வென்று மிகுந்த சக்திமானாக வாழ்வார். இவ்வெண் சித்தி களைத் தரவல்லது.

ஏராளமான ஐஸ்வரியமும் காலத்தினால் மங்காத புகழும் ஏற்படும். உலகப் பிரசித்தமான காரியங்களைச் செய்துவிடுவார்கள். தன் லக்ஷ்யத்தை அடைய உயிரையும் உடலையும் சிறிதும் பொருட்படுத்தாமல் உழைத்து வெற்றியை அடைவார்கள் உலகம் இவர்களை மறக்க முடியாது.

26. இவ்வெண் வயோதிகத்தில் வறுமையும் வீண் முயற்சிகளையும் குறிக்கின்றது. நண்பர்களாலும் கூட்டாளிகளாலும் பெருத்த நஷ்டங்கள் ஏற்படும். தொட்டதெல்லாம் தோல்வியாகவே முடியும். குழப்பத்தையும் தோல்வியையும் குறிக்கும். இவ்வெண் ஆயுளையும் குறைக்கும் கொலை செய்யக் கூடிய விரோதிகள் ஏற்படுவார்கள். லக்ஷ்ய வாதியாக வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் லக்ஷ்யங்களைக் காற்றில் பறக்க விட்டு விட்டு பணத்துக்காகவும் பதவிக்காகவும் சிரமப்பட நேரும். (ஆனாலும் 8 எண்களின் பொதுவான குணத்தை அனுசரித்து கடைசி காலத்தில் கொஞ்சம் யோகமடிக்கும்).

35. இந்த எண் பார்வைக்கு அதிர்ஷ்டகரமாகவே தோன்றும். கூட்டாளிகளாலும் நண்பர்களாலும் பெருத்த நஷ்டங்கள் உண்டாகும். பிரமுகராகிப் பொருளை இழப்பார்கள். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட ஏதுவுண்டு. தீய வழிகளில் பணம் சம்பாதிக்கத் துணை புரியும். நண்பர்களை விரோதித்துக் கொள்வார்கள். திடசித்தமிராது. செலவுகளை மட்டுப்படுத்த முடியாது தீராத வயிற்று நோயை இவ்வெண் உண்டாக்கும். (இருதய சம்பந்தமான நோய்கள் உடையவர்களுக்கு இவ் வெண்ணால் குணமுண்டாகும். பெருத்த வியாபாரங்களில் ஈடுபடும்போது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.)

44 இவ்வெண் சுலபமாகப் பணம் சம்பாதிக்க உதவி புரியும். பொதுஜன ஆதரவால், சினிமா தியேட்டர், அச்சாபீஸ், நிலக் கரி, இரும்பு, மேஜை நாற்காலி முதலிய நாலு கால் சாமான்கள், வர்ணம் பூசுதல், விளையாட்டு சாமான்கள், பந்தயங்கள், பந்தயங்கள் ஏற்படுத்தல் முதலியவையால் நிரம்ப பொருள் சேரும். வாடகைக்கு ஏற்றிச் செல்லும் பஸ், லாரி, வாடகை மோட்டார் முதலியவைகளை வைத்து நடத்தும் தொழில்களும் ஊதிய மளிக்கும். வங்கிகள் வைத்து நடத்தலாம். தொழில் ஒருநாள் மூடப்பட்டு விடுவது நிச்சயம். முதலாலிக்கு மாத்திரம் லாபம் உண்டு.

தீயினால் ஆபத்து ஏற்படும். கட்டடங்கள் இடிந்து விழுந்து உயிர்ச்சேதம் ஏற்படும். அரசாங்க விரோதமும் சிறைவாசமும் நிச்சயமுண்டு. மனம் தீயவழிகளிலே செல்லும். சிறைக்கு வெளியே சுகவாழ்க்கை உண்டு. சிறைப்படாவிடில் உடலில் நோய் ஏற்பட்டு வருத்தும். (தொடரும்)

பண்டிட் சேதுராமன்

சிறப்புமிகு சித்திரா பூரணையும்

இன்று சித்திரா பூரணையும்
சித்திர குப்த விரதமும் அமைந்த தினமாகும்

வருடந்தோறும் வரும் பன்னிருமாதங்களிற் சித்திரை மாதம் தனிச் சிறப்புடையதாகவும், அறுபது வருடச் சுற்றில் சித்திரை முதல் மாதமாகவும், சித்திரை முதலாம் நாள் இராசிச் சக்கரத்தில் முதலாவதான மேடமாகவும் கொண்ட மேட ராசி மாதமாகவும், தமிழ்ப்புதுவருட மாதமாகவும் கொண்டாடப்படுகின்றது.

சித்திரை மாதமும், புத்தாண்டுதினமுமே பிரம்மா இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்ததாகவும், சித்திரைக் குச் சித்திரை நட்சத்திரமும், சித்திரைப் பூரணையும் சேர்ந்த நாளிலேயே இப்பிரபஞ்சத்தில் வாழும் மக்களது நல்வினை, தீவினைகட்கு ஏற்ப பாவ, புண்ணியங்களைக் கணக்கிடுவதற்காக சிவபிரானாற் சித்திரரூபமாகச் சித்திரபுத்திரர் படைக்கப்பட்டதாகவும் புராணங்கள் எடுத்துக் கூறியுள்ளன.

மாதந்தோறும் வரும் பூரணத்தினத்திற் தாய்வழியினர்க்கும், அமாவாசை தினத்திற் தந்தைவழியினர்க்கும் நன்றிக்கடனுடன் பிதிர்காரியங்கள் செய்து வழிபாடுகள். தான தர்மங்கள் செய்வது நம்முன்னோர் வகுத்த வழிமுறையாக உள்ளது.

இந்தவிதத்திலே தைஅமாவாசை, ஆடி அமாவாசை, சித்திரைப் பூரண தனிச்சிறப்புடையனவாகும். இந்த நாட்களில் மக்கள் தத்தம் இயல்புக்கேற்ப இல்லங்களிலோ, ஆலயங்களிலோ, புனித தீர்த்தக்கரைகளிலோ பிதிர்க்கடன்களையும் தானதர்மங்களையும் செய்து வழிபாடுகள் நடாத்துகின்றனர்.

சித்திரை மாதத்திலே சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்துவரும் நாட்கள் சித்திர குப்தர் விரத நாளாகவும், சித்திர பூரணை விரத வழிபாட்டுநாளாகவும் ஆலயங்களிற் சித்திரபுத்திர நாயனார் கதை படித்தும் சித்திரைக் கஞ்சி வார்த்தும் தானதர் மங்கள், வழிபாடுகள் செய்கின்றனர்.

ஆன்மாக்கள் செய்யும் நல்வினை, தீவினைக்கேற்ப அவற்றிற் குரிய பலாபலன்களை கணக்கிட வேண்டி இறைவன் தம்மைப்போல ஒரு சித்திரத்தை ஒரு பொற்பலகையிற் தானியம் பரப்பி அதன் மேல் வரைந்து அதை அம்மையாரிடமும் காட்டினார்.

அம்மை அப்பர் பார்த்த அந்தச் சித்திரத்திலிருந்து ஒரு குழந்தை தோன்றியது. அதுவே சித்திரபுத்திரனார் எனும் பெயர் கொண்டது.

சித்திரத்திற்தோன்றிய சித்திர புத்திரர்க்கு இறைவன் தமது திருவருளினாலே வேண்டும் வல்லமைகளைக் கொடுத்து உலக ஆன்மாக்களின் நல்வினை, தீவினைகளைக் கணக்கிட்டு அவரவர்க்கு ஏற்ப நன்மை, தீமைகளை அனுபவிக்கச் செய்யும்படி வேண்டினார்.

இறைவன் திருவருள் வேண்டுதலின்படி சித்திர புத்திரனார் ஜெமதர்ம ராசனுடைய கணக்கராகி எமது நல்வினை தீவினைகளைப் பகுத்தறிந்து ஒப்புவித்துப் பாவ புண்ணியங்களை வகுப்பதாகச் சூதமுனிவர் எடுத்துக் கூறியிருப்பதாகப் புராணங்கள் அறிவுறுத்தியுள்ளன.

மேலும் திருவிளையாடற் புராணத்திலே தேவந்திரன் பூமியில் வந்து சிவபூசை வழிபாடுகள் செய்து மீண்டும் இந்திரலோகம் சென்ற நாளாகவும் சித்திராபூரணை சிறப்பிக்கப்படுகின்றது.

மாதங்களிற் சிறந்ததும் முதன்மையானதும், ருதுக்களில் சிறந்ததான வசந்த ருதுவும், நட்சத்திரங்களிற் சிறந்ததான சித்திரையும், திதிகளிற் சிறந்ததான பௌர்ணமியும் சேர்ந்த சிறப்புமிக்க இந்த நாளிலே வழிபாடுகள் நடாத்தி விரதம் அனுட்டித்ததன் பலனாக இந்திரனும், இந்திராணியும் புத்திர பாக்கியத்தைப் பெற்றதாகவும், அமராவதி எனும் செட்டிச்சி அம்மையார் இவ்விரதத்தை அனுட்டிக்காமல், வழிபாடு செய்யாமல் உதாசீனம் செய்ததாற் பெருந்துன்பத்திற்கு ஆளானதாகவும் சித்திர புத்திர நாயனார் கதையிலே எடுத்துக் கூறப்பட்டுள்ளது காணலாம்.

எனவே பல்வேறு சிறப்புக்களும் கொண்ட சித்திரா பூரணை நன்நாளிலே நாமும் நம்மாலியன்றவழி பாடுகளைத் தான தர்மங்களைச் செய்து வாழ்வில் நற்பேறடைய முயல்வோமாக. *

நீர்வை மணி

சித்திரகுப்த வழிபாடும்

பாகஸ்பதி துணை

அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
10ஆம் நாள் தீர்த்தத்திருவிழா

(20.04.2008)

தாலம் நிரையுறும் விழுதூன்றி ஆலுந்தளைத்திட
சோலையுறும் கோவிலெழில் சங்கையுறவே - கோலமுறும்
அல்வையூர் ஆலடியான் அருந்தீர்த்தம் அள்ளிப்பருகிட
அல்லல்கன்று ஆனந்தம் ஆகுமே

சங்கரியான் மடிதவளும் ஐங்கர மூர்த்தியே
சாந்தமுகங் காட்டிசஞ்சலம் தீர்த்திடுவாயே
துங்கையில் மோதகம் தாங்கி அதனுள்
பெருவாரம் நிறைவுற வைத்தருள்வாய்
மங்களத்துள் மங்களமாய் மாண்புறும் முன்னவனே
மகாகணபதியே மாண்மியம் பெருகும் ஆலடியானே
திங்கள் ஒளி முகத்து திகழ் அழகு பொலிந்தவனே
பார்போற்றும் பால கணபதியே நற்கதியருள்வாயே

(1052) அல்வாயூர் சி.சிவநேசன்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், மகளிர் தினத்தை யொட்டி நடாத்தப்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு, விழாவில் சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொண்ட கெயர் நிறுவன உத்தியோகத்தர் செல்வி எஸ்.ரேவதி பரிசில் வழங்குவதையும், கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ், கோப்பாய் அன்னை திரேசா அமைதி இல்ல அருட்சகோதரிகள் மற்றும் அருட்சகோதரர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படக்கில் காணலாம்.

ஈராக் போரில் தோற்றுவிட்டால் அல்-கொய்தாவின் கை ஓங்கிவிடும்

அமெரி. அதிபர் புஷ் பேட்டி

(வோஷிங்டன்)

ஈராக் போர் கடினமாக உள்ளது .இப் போரில் தோற்றால் அல்-கொய்தாவின் கை ஓங்கிவிடும் என்று புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டு தூக்கில் போடப்பட்ட பிறகும் அங் குள்ள தீவிரவாதிகளும் அல்-கொய்தா இயக் கத்தினரும் தொடர்ந்து வன்முறை சம்பவங் களில் ஈடுபட்டு வருகிறார்கள் அதனால் அங்கு அமைதி ஏற்படுவதற்காக அமெரிக்க, இங் கிலாந்து நாட்டு படைகள் முகாமிட்டுள்ளன. இப்போரில் அமெரிக்க இராணுவத்துக்கு உயிரிழப்பு ஏற்படுவதால் அதிபர் புஷ்சுக்கு அமெரிக்காவில் செல்வாக்கு சரிந்து வருவ தாக கூறப்படுகிறது.

இந் நிலையில் இங்கிலாந்து பிரதமர் கார் டன் பிரவுன் நேற்று முன்தினம் வாஷிங்ட னுக்கு வந்தார். அதிபர் புஷ்சை சந்தித்தார். இரு வரும் அரசியல் பொருளாதாரம் சுற்றுச் சூழல் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

போர் கடினமாக உள்ளது.

பின்னர் புஷ் நிருபர்களுக்கு பேட்டி அளித் தார். அப்போது அவர் கூறியதாவது,

ஈராக் போரில் வெற்றி பெறுவதில் நான் ஆர் வமாக உள்ளேன் அங்கு அரசியல் மற்றும் பொருளாதார விஷயங்களில் நல்ல முன் னேற்றம் காணப்படுகிறது. பாதுகாப்பு விஷயத் தில் வெற்றி பெறுவதே முக்கியம் இந்த வெற் றியை ஈட்டுவதற்காக போதுமான படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்தப் போர் எளிதானதாக இல்லை மிகவும் கடினமாக உள்ளது. நான் எதிர்பார்த்ததை விட நீண்ட காலத்துக்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்த போரில் நாம் வெற்றி பெற்றால் அல்கொய்தா தீவிரவாத இயக்கத் துக்கு பலத்த அடியாக இருக்கும். அணு ஆயுத நாடாக விரும்பும் ஈரானின் திட்டத்துக் கும் வீழ்ச்சி ஏற்படும்.

ஆனால் ஈராக் போரில் நாம் தோற்று விட்டால் அல் கொய்தாவின் கை ஓங்கி விடும் அவர்கள் மிகப் பெரிய வெற்றி பெற்றதாக



கொண்டாடுவார்கள். ஈராக்கை பாதுகாப் பான புகலிடமாக ஆக்கிக்கொண்டு நம் மீது தாக்குதல் நடத்துவார்கள்.

மேலும் ஈரான் நாடு நம்மையும் நமது நட்பு நாடுகளையும் மதிக்காது. ஈரானின் அணு ஆயுதத்திட்டங்களை நாம் தடுக்க முயலும் போது நமது எதிர்ப்பை ஈரான் பெரிதாக எடுத்துக் கொள்ளாது.

ஆகவே ஈராக் போரில் வெற்றி பெறுவது மிக வும் முக்கியம். இவ்வாறு புஷ் கூறினார்.(அ-5)

10ஆயிரம் மடங்கு வேகம் கொண்ட புதிய இன்ரநெற் கண்டுபிடிப்பு

(ஜெனீவா)

இப்போதுள்ள 'புறோட்பான்ட்' இணைப்பை விட,10 ஆயிரம் மடங்கு அதி வேகம் கொண்ட புது இன்டர் நெட் முறை கண்டு பிடிக்கப்பட்டுள் ளது; நொடிப் பொழுதில், சினிமா படத்தை 'டவுன் லோ' செய்யும். இன்டர் நெட்டில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள பயன்படுவது 'வெப்' முறை. இதன் அடிப்படையில், 1989ஆம் ஆண்டு, டிம் பெர்னர்ஸ் லி என்ற தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானி, சுவிட்சர்லாந்தில் உள்ள சேர்ன் என்ற இடத்தில் கண்டுபிடித்தார் அதே இடத்தில் தான் இப்போது இன்டர் நெற்றில் புது சாதனை படைக்கப்பட்டுள்ளது. இன்டர்நெற்றை அதி வேகமாக இயக்க பயன்படும் புதிய முறைக்கு 'கிரிட்' என்று பெயர். கம்யூட்டர் 'பவர்' மற்றும் இன்டநெட் 'ஸ்டோரேஜ்' கொள்ளளவு திறனை அதி கரிக்க இது பயன்படுகிறது. இதன் மூலம், ஆன்-லைன் கேம்கள், வீடியோ டெலிபோன் போன்றவற்றுக்கு செலவு குறைவாகும். அது போல, மிக அதிகமாக சினிமா படங்கள் உட்பட பலவற்றை அதிவேகத்தில் 'டவுண்லோ' செய்ய உதவும். பல நாட்டு விஞ்ஞானிகள், கடந்த ஏழாண்டாக இந்த 'கிரிட்' ஆராய்ச்சி திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போது அதில் வெற்றி பெற்றுள்ளனர். ஒரு நாட்டில் இருந்து, இன்னொரு நாட்டுக்கு தகவல்களை இன்டநெட் மூலம் அனுப்புவது, டவுண்லோ' வேகம் போன்ற விஷயங்களில் இந்த 'கிரிட்' முறை பெரிதும் கை கொடுக்கிறது. இப்போதுள்ள 'புறோட் பா' இணைப்பு வச தியை உள்ள வேகத்தை விட 10ஆயிரம் மடங்கு அதிகம் இப்படி அதிவேகத்தில் இன்டநெற் உதவுவதால் பல நாடுகளில் உள்ள பலதுறை யைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு மிக வும் உதவும். (அ-5)

ஈராக்கில் அமெரிக்காவுக்கு தோல்வி

அல்-குவைதாவின் ஒலி நாடாவில் தெரிவிப்பு

(துபாய்)

ஈராக்கில் அமெரிக்கா படையெடுத்து ஐந்து. ஆண்டுகள் நிறைவானதை நினை

வூட்டும் வகையில் அல் -குவைதா தலைவர் அய்மான் அல் -ஜவாகிரி ஒலி நாடா வெளி யிட்டுள்ளார். அதில் ஈராக் போரில் அமெரிக் காவுக்கு தோல்வியை தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை என கூறப்பட்டுள்ளது.

ஜவாகிரியினக் ஒலி நாடா இஸ்லாமிய இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள் ளது. அதில் கூறியிருப்பதாவது ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்து ஐந்து ஆண்டுகள் முடிந்து விட்டது. அவர்களுக்கு தோல்வியை தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை.

ஈராக்கில் உள்ள அமெரிக்க படையினர் அங்கிருந்து வெளியேறினால் அனைத்தை யும் இழந்தவர்களாகி விடுவார்கள் தொடர்ந்து அங்கேயே இருந்தால் ரத்தத்தை சிந்தி இறப்பை சந்திக்க நேரிடும். தனது இராணுவம் மற்றும் நாட்டு மக்களுக்காக அதிபர் புஷ் தேர்வு செய்து இருப்பது இதை தான். இராணுவ வீரர்கள் வாபஸ் என்ற முட்டாள் தனமான நாடகத்தை அதிபர் புஷ் துவக்கி அதில் இருந்து விலகியும் சென்றுள்ளார்.

ஈராக்கில் ஏற்பட்ட தோல்வியில் இருந்து வெளிப்படவே இந்த நாடகம் நடத்தப்படுகிறது. படைகளை வாபஸ் பெறும் பிரச்சினையை தனக்கு அடுத்தபடியாக வரும் அதிபருக்கு விட் டுச் செல்லவே புஷ் விரும்புகிறார் இவ்வாறு அந்த ஒலி நாடாவில் ஜவாகிரி பேசியுள்ளார். (அ-5)

மனித வெடிகுண்டு தாக்குதலில் ஈராக்கில் 51 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் தியாலா மாகாணத்தில் சன்னி பிரிவு பழங்குடி மக்கள் அல்-கொய்தா தீவிர வாதிகளை எதிர்த்து போரிட தனிப்படை அமைத்துள்ளனர். 2 நாட்களுக்கு முன்பு நடந்த சண்டையில் இப்படையைச் சேர்ந்த 2பேர் பலியானார்கள் அவர்களுக்கு இரங் கல் கூட்டம் நடத்த வேண்டாம் என்று அல் - கொய்தா தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத் தனர். அதை மீறி பழங்குடி மக்கள் ஒரு கூடா ரத்தில் இரங்கல் கூட்டம் நடத்தினர்.

இதனால் அந்த கூட்டத்துக்குள் புகுந்த மனித வெடிகுண்டு தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய் தான் இதில் 51 பேர் பலியானார்கள் 22 பேர் காயம் அடைந்தனர். (அ-5)

நூறு ஆண்டுகளில் பங்களாதேஷ் முழுவதும் கடலில் மூழ்கி விடும்

விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(லண்டன்)

இன்னும் 100 ஆண்டுகளில் கடலின் நீர் மட்டம் 4 அடி உயர்ந்து விடும் என்று விஞ் ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பங்களா தேஷ் முற்றிலுமாக மூழ்கி விடும் என்று அவர் கள் கூறியுள்ளனர்.

சீதோஷ்ண நிலைமாற்றம்குறித்து உல கம் முழுவதும் விஞ்ஞானிகள் மத்தியில் விவா தம் நடந்து வருகிறது. பூமி வெப்பமாகி வரு வது பற்றியும் அவர்கள் கவலை அடைந்துள் ளனர். இந்நிலையில், கடலின் நீர்மட்டம் கணி சமாக உயரும் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இந்த வாரம் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் ஜரோப்பிய புவி அறிவியல் சங்க மாநாடு நடைபெற்றது. அதில் பங்கேற்ற விஞ்ஞானிகள், இன்னும் 100 ஆண்டுகளில் கடல் நீர் மட்டம் 4அடிஉயரும் என்று அறிக்கை மூலம் தங்கள் கணிப்பை வெளியிட்டுள்ளனர்.

காரணம் என்ன?

இது குறித்து, இந்த மாநாட்டில் பங்கேற்ற இங்கிலாந்தைச் சேர்ந்த பிரவுட்மேன் கடல் சார் ஆய்வுகூடத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ஸ்வெட்லானா ஜெவ்ரோஜ்வா கூறியதாவது;

கட்ந்த 2 ஆயிரம் ஆண்டுகளாக கடல் நீர் மட்டம் சீராக இருந்தது. 18-ஆம் நூற்றாண் டில் 2 செ.மீ. மட்டுமே கடல் நீர்மட்டம் உயர்ந் தது. 19-ஆம் நூற்றாண்டில் 6செ.மீ. உயர்ந் தது. ஆனால், பனிப்பாளங்கள் உருகியதன் காரணமாக, 20-ஆம் நூற்றாண்டில் கடல் நீர் மட்டம் 19 செ.மீ.உயர்ந்தது.

இந்த நூற்றாண்டைப் பொறுத்தவரை, கடல் நீர்மட்டம் அதிகமாக உயரும். ஏனென் றால், பனிப்பாறைகள் உருகி வருகின்றன. பனிப்பாளங்கள் நகர்ந்த படி மறைந்து வரு கின்றன. தண்ணீர் வெப்பமடைந்து வருகிறது. இந்த காரணங்களால், இந்த நூற்றாண்டு முடியும்போது,அதாவது சுமார் 100 ஆண்டு களில், கடலின் நீர்மட்டம்4 அடிஉயர்ந்து விடும்.

சீதோஷ்ணநிலை மாற்றம் பற்றி ஆராயும் குழு, கடல் நீர்மட்டம், அரை அடி முதல் 2 அடி வரை உயரும் என்று கணித்துள்ளது. அது சரியல்ல. அதைவிட அதிகமாகவே உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

பங்களாதேஷ் அழியும்.

கடல் நீர்மட்டம் எவ்வளவு உயரும் என்ப தில் விஞ்ஞானிகளுக்கிடையே மாறுபட்ட கருத்து இருந்தபோதிலும், எந்த பகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்படும் என்பதில் அவர் கள் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். ஆபி ரிக்கா, ஆசிய நாடுகளில் உள்ள வளரும் நாடு கள் கடுமையாக பாதிக்கப்படும் என்று அவர் கள் கூறுகிறார்கள் வெள்ளத்தடுப்பு வசதிகளை செய்து கொள்ள வசதி இல்லாத பங்களா தேஷ் போன்ற நாடுகள், முற்றிலுமாக மூழ்கி விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சீனாவில்கடல் நீர்மட்டம் 3அடி உயர்ந் தால், அங்கு 7 கோடிக்கும் மேற்பட்டோர் வீடு களை இழந்து வெளியேற வேண்டி இருக் குக்கும் என்றும், வியட்நாம் நாட்டில் 10 சத வீத மக்கள் வெளியேற வேண்டி இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.(அ-5)

திருமணச் செய்திக்கு புடின் மறுப்பு

(மாஸ்கோ)

ஜிம்னாஸ்டிக் வீராங்கனையை திரு மணம் செய்து கொள்ளப் போவதாக வெளி யான செய்தியை, ரஷ்ய அதிபர் புடின், மறுத் துள்ளார். ரஷ்ய அதிபர் புடின்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற, ஜிம்னாஸ்டிக் வீராங்கனை அலினாவை, காதலித்து வரு வதாக செய்திகள் வெளியாயின. இருவரும், வரும் மே மாதம், திருமணம் செய்து கொள் ளப் போவதாகவும் கூறப்பட்டது, இந்தச் செய்தி உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் அதிபர் புடின் இந்த செய்தியை மறுத்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்,

ஜிம்னாஸ்டிக் வீராங்கனை அலினாவை, திருமணம்செய்து கொள்ள விருப் பதாக தவறான செய்தி வெளி யிடப்பட்டுள்ளது. இந்த செய்தியில், ஒருவரி கூட உண்மை யில்லை என்றார். இதற்கிடையே, இந்த செய் தியை வெளியிட்ட மொஸ்கோவ்ஸ்கி கொரஸ் பொன்டென்ட என்ற பத்திரிகை இதற்காக வருத் தம் தெரிவித்துள்ளது.

(அ-5)

பாகிஸ்தான் அரசு அலுவலகங்களில் உள்ள முஷாரப்பின் படத்தை நீக்க அதிரடி உத்தரவு

பாகிஸ்தான் அரசு அலுவலகங்களில் உள்ள அதிபர் முஷாரப் படத்தை நீக்குவது பற்றி பிரதமர் கிலானி பரபரப்பு பேட்டி அளித் துள்ளார்.

இராணுவ சீருடையில் முஷாரப் படம்

பாகிஸ்தான் இராணுவ தளபதியாக இருந்த முஷாரப், 1999ஆம் ஆண்டு பாகிஸ் தானில் ஆட்சியைக் கைப்பற்றி அதிபராக வும் ஆனார். அதைத்தொடர்ந்து, அவர் இரா ணுவ சீருடையில் தோன்றும் படம் அனைத்து அரச அலுவலகங்களிலும் வைக்கப்பட்டது. பாகிஸ்தானின் தந்தை என்று அழைக்கப் படும் ஜின்னர் படத்துக்கு அருகே இந்த படம் வைக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் பெனாசிர் கட்சியும், நவாஸ் ஷெரீப் கட்சியும் இணைந்து ஆட்சி யைப் பிடித்தன. இவர்களின் அரசு, அதிபர் முஷாரப்புடன் மோதல் போக்கில் ஈடுபட்டு வரு கிறது. அந்தவகையில், முஷாரப் இராணுவ உடையில் தோன்றும் புகைப்படத்தை நீக்கு மாறு அனைத்து அமைச்சகங்களுக்கும், துறை களுக்கும் பாகிஸ்தான் அரசு ரகசிய உத்தரவு பிறப்பித்துள்ளது. முஷாரப், கடந்த நவம்பர் மாதம் இராணுவ தளபதி பதவியில் இருந்து விலகி விட்டார். தற்போது அவர் இராணுவத்

உலக தினசரி

தில் இல்லை. எனவே. இராணுவ சீருடை யில் உள்ள அவரது படத்தை நீக்க அரசு உத்தர விட்டு இருப்பதாக கூறப்படுகிறது.ஆனால் இந்த நடவடிக்கையால், முஷாரப் -பாகிஸ்தான் அரசு இடையிலான விரிசல் அதிகரிக்கும் என்று கரு தப்படுகிறது. (அ-5)

சினிமாத் துளிகள்

அர்ஜூன் நடித்து வரும் துரை படத்தில் ஒரேயொரு குத்தாட்ட பாடலுக்கு மட்டும் ஆட சம்மதம் தெரிவித்துள்ளாராம் நடிகை கஜாலா.

புதுமை நடிகர் பார்த்தீபன் தனது பெயரை அழைப்பிதழில் போடாததால் வல்லமை தாராயோ படத்தின் ஒலிப்பேழை வெளியீட்டு விழாவிற்கு வரவில்லையாம்.

கிழக்கே போகும் ரயில், புதிய வார்ப்புகள் என்று படத் திற்கு புதிய முறையில் தலைப்புகளை சூட்டியது கதாசிரியர் செல்வராஜ் தான் என்று விழா ஒன்றில் பாரதிராஜா தெரிவித்தார்.

பேரறிஞர் அண்ணாவின் பால்ய காலம் முதல் அவர் திரைப்படத் துறையில் நுழைந்து வெற்றி ஈட்டிய, வரையுள்ள பகுதி பேரறிஞர் என்ற தலைப்பில் திரைப்படமாக வருகிறது. இதை தீண்ட தீண்ட என்ற படத்தை இயக்கிய ஏ.பி.முகன் இயக்கு கிறார்.

'வல்லமை தாராயோ' படத்தின் ஒலிப்பேழை வெளியீட்டுவிழாவில் மூத்த கலைஞர்கள் எம்.என்.ராஜம், வெண்ணிற ஆடைநிர்மலா, பின்னணி பாடகர் ஏ.எல்.ராகவன், மஞ்சுளா விஜயகுமார், விஜயகுமார், வீராச்சாமி, பத்திரிகை தொடர்பாளர் பிலிம் நியூஸ் ஆனந்தன் உள்ளிட்ட பலர் அப்படத் தயாரிப்பு பாளரால் கௌரவிக்கப்பட்டார்கள்.

தனக்கு பெண் ரசிகைகள் குறைவாக இருக்கிறார்கள் என்று வருத்தம் தெரிவித்திருக்கிறார் நேபாளி பரத்.

ஷங்கர் இயக்கத்தில், ரஜினிகாந்த் நடிக்கும் ரோபோ படத்தில் ஐஸ்வர்யாராய் நடிப்பது சந்தேகமாம். அனேகமாக மற்றொரு பொலிவுட் நடிகையை நடிக்க வைப்பதற்கான பேச்சு வார்த்தை நடைபெறுகிறது.

ஏகன் படத்தைத் தொடர்ந்துசிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் படத்தில்நடிக்கும் அஜித்திற்கு ஜோடியாக நடிக்க சமீரா ரெட்டியை அணுகியுள்ளார்களாம்.

திரிஷா தனது சம்பளத்தை ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சமாக உயர்த்திவிட்டாராம்.

யாரடி நீ மோகினி படம் வெற்றி பெற்றுள்ளதால் தனது சம்பளத்தை இரண்டு கோடியாக உயர்த்தலாமா எனத் திட்டமிட்டு வருகிறாராம் தனுஷ். (இயக்கத்திற்கும் சேர்த்துதானா....)

குசேலனில் ஒரேயொரு பாடலுக்கு குத்தாட்டம் போடுகிறார் நடிகை சுஜா .

சினி விமர்சனம்



கண்டதும் காதல்

தயாரிப்பு
ஒ.எஸ்.டி.பிலிம்ஸ்
நட்சத்திரங்கள்
பரத்த பிரேம், ராஜா ரவீந்தர், கோவிந்தன் நம் தேவ, மயில்சாமி, மீரா ஜாஸ்மீன் மற்றும் பலர்.
கதை, திரைக்கதை, இயக்கம்
வி.இசட் துரை

வழக்கமான பழிக்கு பழிவாங்கும் கதை, ஆனால் சற்று குழப் பத்தோடு செய்தி ருக்கிறார்கள். கார்த்திக் (பரத்) ஒரு மென்பொருள் பொறி யியலாளர். இவர் பணி நிமித் தம் சென்னையிலி ருந்து ஊட்டிக்கு செல்கிறார். அங்கு ப்ரியாவை (மீரா ஜாஸ்மீன்) பார்க் கிறார். கண் ட தும் காதல் பற்றிக் கொள்கிறது. பெற்றோர்களின் எதிர்ப்பை மீறி ப்ரியா கழுத்தில் கள். கார்த்திக் கிறார். கார்த் தாலி கட்டு கொடுக்க,அதை வின் பெற்றோர் திக் ப்ரியா வரும் பொலீஸ் மீது புகார் கள். கார்த்திக் அதிகாரி (ராஜா விசாரிப்பவராக ரவீந்தர்)த ப்ரியா வின் அழகில் மயங்கி, அவரை அடைய முயர்ச் சிக் கிறார். இந்த சியில் ப்ரியா முயற்சி யிலில் ப்ரியா உயிரை விடு கிறார். அவர் கண இந்த பழியை திக் மீது வரான கார்த் அவரை சிறைக்கு அனுப்புகிறார். சுமத்தி

நேபாளி

சிறையில் தன்னுடன் இருக்கும் சக கைதியான நேபாளி ஒருவர், தன் கதையை கார்த்திக்கிடம் வித்தியாசமான முறையில் கூற, சிறையிலிருந்து வெளியே வரும் கார்த்திக், நேபாளியாக உருவம் கொண்டு, இந்த சமுதாயத்தில் பாலியல் பலாத்காரம் செய்யும் சமூக விரோதிகளை எப்படி களை எடுக்கிறார் என்பது, அதை பொலீஸார் எப்படி தடுத்து நிறுத்தினார்கள் என்பது தான் கதை.

திரைக்கதையை வித்தியாசமாக அமைக்க வேண்டும் என்று நினைத்தது சரி, அதற்காக குழப்பமாக அமைத்தால்... ஒரு மென் பொருள் பொறியியலாளருக்கு எப்படி விஞ்ஞான முறையில் கொலை செய்யும் உத்தி தெரிய வருகிறது? நேபாளி என்ற உருவத்தின் முக்கியத்துவம் என்ன? பொலீஸ் அதிகாரி, மீரா ஜாஸ்மீன் இடையிலான காட்சிகள் நீளமாக இருப்பது ஏன்? சிறையில் பாதிக்கப்பட்ட ஒருவர் சொல்வதை வைத்து நாயகன் கொலை செய்கிறான். அப்படியென்றால் நாயகனுக்கு சுய புத்தி கிடையாதா நாயகனுக்கு முதுகில் எழுதினால் தெரியும் என்பது ரசிகர்களுக்கு எப்படி புரியும்? இதன் திரைக்கதை வடிவம் ப்ளாஷ் பேக் உத்தியில் சொல்லப் படுகிறதா? அல்லது ரசிகர்களின் பார் வையில் திரைக்கதை சொல் கிறதா? என்றே புரியவில்லை. இப் படி பல வினாக்களுக்கு இயக்குநர் விடையளிக்கவில்லை.

காமடியும் இல்லை படத்தில் நாயகன் பரத்த தன் பணியை சிறப்பாக செய்திருக்கிறார். மீரா ஜாஸ்மினின் மரணம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால் காதல் காட்சிகள் பளீச். மீரா ஜாஸ் மீன் இவ்வளவு கவர்ச்சியாக இனி நடிக்க மாட்டார் என்றே தோன்றுகிறது.

உயர் பொலீஸ் அதிகாரியாக வரும் பிரேமின் நடிப்பில் மிடுக்கு இருக்கிறது. ஸ்ரீகாந்த் தேவாவின் இசையில் பாடல்களை விட, பின்னணி இசை பரவாயில்லை.

படத்தில் பாராட்டப்பட வேண்டிய அம்சம் ஒளிப்பதிவு, ஒளிப்ப திவாளர் மதி தன் பங்கை சரிவர செய்திருக்கிறார்.

நேபாளி–குழப்பம்

திருமணம் என்பது என் வாழ்வில் இல்லை

–நடிகர், இயக்குநர் எஸ்.ஜே.சூர்யா–

வாலி, குஷி, நியூ, அன்பே, ஆளுயிரே, வியாபாரி, திருமகன் உள்ளிட்ட படங்களை இயக்கியும் நடித்தும் இருக்கும் நடிகர் எஸ்.ஜே. சூர்யா, ஒரு சிறு இடைவெளிக்குப் பின், மீண்டும் தாய் முத்துச்செல்வம் என்ற இயக்குநரின் இயக்கத்தில் நியூட்டனின் மூன்றாம் விதி என்ற படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். படத்தைப் பற்றி நம்மிடம்பேசிய அவர் நான் நடித்த வியா பாரி, திருமகன் ஆகிய படங்கள் வெற்றி பெறாததால் எனக்கு நானே சிறு இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டேன். ஏன் என் படங்கள் வெற்றி பெறவில்லை, எங்கு தவறு செய்தோம்? எப்படிநடந்தது? என்று இது குறித்து அந்த இடைவெளியில் ஆராய்ந்தேன். பிறகு நான் மற்றொருவரின் இயக்கத்தில் நடித்து வெற்றி பெற்ற பிறகு தான் என்னை ஒரு நடிகன் என்று ஒப்புக்கொள்ள முடியும் என்று எனக்கு நானே ஒரு விதியை உருவாக்கி கொண்டதால் நல்ல தொரு கதைக்காக காத்திருந்தேன். அப்போது என்னு டைய நியூ படத்தின் மூலம் விநியோகஸ் தராக அறிமுகமாகி, தற்போது தயாரிப்பாளராக உயர்ந்திருக் கும் எனது நண்பர் நந்தகோபாலிடம் இயக்குநர் தாய் முத்து செல்வம் ஒரு கதையை எனக்காக தயார் செய்திருப்பதாக சொல்லியிருந்தார். அந்த கதையை கேட்டேன். உடனே ஒத்துக் கொண் டேன். அது என்ன கதை என்றால், நாயகனின் காதலியை பாலியல் பலாத்காரம் செய்தஒருவனை நாயகன் பழிவாங்குவது. இது என்ன புதுமை என்கிறீர் களா, பழிவாங்கும் விதம் புதிது.

அதாவது நாயகனின் காதலியை பாலியல் பலாத்காரம் செய்தவர் இந்தியாவின் பத்து பணக் காரர்களில் ஒருவர். அவரை எப்படி காலை பத்து மணி முதல் பன்னிரண்டு மணிக்குள் சொல்லி வைத்து பழிவாங்குகிறார் என்பது தான் கதை. டைம் ஃபாக்டரை முன் வைத்து உரு வாக்கப்பட்ட கதை. அதனால் ஒத்துக் கொண் டேன். அதில் பணக்காரராக 'ஆஹா' படத்தில் நாயகனாக அறிமுகமான ராஜிவ் கிருஷ்ணா நடிக்கிறார். இதில் எனக்கு ஜோடி யாக நடிக்கும் நடிகை இதுவரை முழுவு செய்யப் படவில்லை என்றார். பின் இது வரை ஏன் திரு மணம் செய்து கொள்ள வில்லை? என்று கேட்டதற்கு. ஒன்றை இழந்தால் தான் மற்றொன்றை பெற முழுயும். அதனால்தான் நான் என் சொந்த வாழ்க்கையை இழந்து, சினிமாவை பெற்றிருக் கிறேன். சினிமாவை பொறுத்தவரை எனக்குள்ள இலட்சி யம் பெரியது. அதை சொன்னால் அனைவரும் சிரிப்பார்கள் அதற்காக சொல்வதில்லை நான் ஒரு நடிகனாக வெற்றி பெற வேண்டும். என்னை நானே இயக்கி நடிகனாக வெற்றி பெறுவதை விட, மற்றொருவரின் இயக்கத்தில் நான் வெற்றி படத்தை தரவேண்டும் என்று எண்ணுகிறேன். அப்போது தான் நான் ஒரு நடிகனாக வெற்றி பெற்றிருக்கிறேன் என்று பொருள். இதுவரை நான் நடித்த இண்டு படங்கள் வெற்றி பெறாததற்கு நானும் ஒரு காரணம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் இந்த 'நீயூட்டனின் மூன்றாவது விதி' என்ற படத்தின் மூலம், நானும் ஒரு நடிகனாக வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. காரணம் கதை மற்றும் அதில் உள்ள வேகமான திரைக்கதை என்று சொல்லி முடித்த அவருக்குள் நம்பிக்கை தெரிந்தது.

ஜெயம்ரவி டாக்டராக தோன்றும் தாம் தூம்

மீடியா ஒன் குளோபல் என்டர்டெய்ன் மெண்ட் என்ற நிறுவனம், ஜங் கரன் பிலிம்ஸ் இன்டர்நெஷனலுடன் இணைந்து தயாரிக் கும் படம் தாம்தூம். இந்த படத்தைப் பற்றி நம்மிடம் பேசிய நடிகர் ஜெயம் ரவி, டாக்டராக பணிபுரியும் கதாநாயகனுக்கு கிராமத்தில் இருக்கும் கதாநாயகி (கங்கணா ராவத்) மீது காதல் இந்த காதல்நிறைவேறும்போது, ரஷ்யா நாட்டில் நடைபெறும் ஒரு மருத்துவ மாநாடு மற்றும் மருத்துவ முகாம் ஒன்றிற்காக கதா நாய கன் செல்ல வேண்டிய சூழல்ஏற்படுகிறது. அங்கு நடைபெறும் எதிர் பாராத சம் பவங்கள் தான் படத்தின் கதை என்று சுருக்கமாக விளக்கம் தந்தார்.

மேலும் இயக்குநர் ஜீவா வின் மறைவுக்குப்பின், இந்தப் படத்தை அவருடைய உதவியாளர் மணிகண்டன் மற் றும் ராஜ சேகர் ஆகியோர் தான் பொறுப்பு ஏற்றுக் கொண்டு படத்தை முழத்தார்கள். படம் இயக்குநர் ஜீவா எதிர்பார்த் தது போல்தான் வந்தி ருக்கிறது என்றார்.

இந்த படத்தில் என் கதா பாத்திரத்தின் பெயர் கௌதம் சுப்பிர மணியன். கங்கணாராவத் மற்றும் லட்சுமி ராய் ஆகியோர் ஜோடி யாக நடித்துள்ளனர்.

இந்த படம் வெளிவந்தபின் எனக்கு ஆக்ஷன் ஹீரோ என்ற இமேஜ் கிடைக்கும் என்றார். படத்தின் முதல் பாதியில் மென்மை யாகவும், இரண்டாம் பாதியில் ஆக்ஷன் ஹீரோவுக்குத் தேவை யான அனைத்து அம்சங்களும் இடம்பெற்றிருக்கிறது என்றார்.

இந்த படத்தைப் பற்றி நம்மிடம் பேசிய வசனகர்த்தா எஸ்.ராம கிருஷ்ணன், 'தாம்தூம்' என்பது தமிழ் சொல்தான் என்றும், இதனை இசைக்குறிப்பில் பயன்படுத்துவர் என்றும் கூறினார்.

நடிகை குஞ்சரம்மா மாரடைப்பால் மரணம்

பிரபல நடிகையும் நாட்டுப்புறப் பாடகியுமான தேனி குஞ்சரம்மா (வயது 75) மாரடைப்பால் மரணமாகியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல்நலக் குறைவு காரண மாக மருத்துவ மனையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர்கூந்த வியாழக் கிழமை மாரடைப்பால் மரணமாகியுள்ளார். இவர் பாரதிராஜாவின் கருத்தம்மா படத்தில் பாடகி யாகவும் நடிகையாகவும் தமிழ்த் திரையுலகில் அறி முக மாகி பின் னர் ஏராளமான படங்களில் நடித்தும் பாடியும் உள்ளார்.

இவர் இறந்த தகவல் அறிந்ததும் இயக்குநர் பாரதிராஜா உள்ளிட்ட திரையுலகினர் அவரது உடலுக்கு மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினர். இவரது மறைவுக்கு அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதா இரங்கல் தெரிவித்துள் ளார்.

விஜயுடன் நடிக்க ஆசை என்கிறார் தென். அவுஸ்திரேலியப் பிரதமர்

அண்மையில் தெற்கு அவுஸ்திரேலிய பிரதமர் மைக்ரான் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக சென்னை வந்திருந்தார். தென்னிந்திய தொழில் வர்த்தக சபை நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர். இரண்டு நாடுகளுக்கும் இடை யேயான கலாசார தொடர்பு சிறந்து விளங்கினால் மட்டுமே அந்த நாடுகளுக்கிடையேயான தொழில் மற்றும் வர்த்தக உறவு மேம்படும். அந்த வகை யில் இந்தியாவின் பங்களிப்பு குறிப் பாக, சென்னையின் பங்களிப்பு சிறந்த வகை யில் அமைந்துள்ளது.

இங்குள்ள கலைத்துறை மீது எனக்கு நாட்டம் அதிகம். தமிழ் சினிமா, உலக தரத்திற்கு இணையாக உயர்ந்து வரு கிறது. நடிகர் விஜய்யின் நடிப்பை நான் மிகவும் ரசிப்பேன். அவருடைய படங்களைப் பார்க்கும் போது அவருடன் ஒரு படத்திலாவது இணைந்து நடிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது என்றார்.

உடனே அருகிலிருந்த தென்னிந்திய தொழில் வர்த்தக சபை யின் தலைவர் ஏ.வி.எம். பாலசுப்பிரமணியன் விஜய்யின் அடுத்த படத்தை நான்தான் தயாரிக்கிறேன். அதன் படப்பிடிப்பு தெற்கு அவுஸ் திரேலியாவில் நடந்தால் கண்டிப்பாக என் படத்தில் விஜய் யுடன் உங்களை நடிக்க வைப்பேன் என்றார்.

கோப்பாய் கல்விக்கோட்டத்தின் க.பொ.த (சா/த) 2007 பெறுபேறுகள்

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் யாழ்ப் பாணம், நல்லூர் , கோப்பாய் என மூன்று கல் விக்கோட்டங்கள் இருக்கின்றன. இவைகளுள் யாழ்ப்பாணம்,நல்லூர் நகரைச் சார்பாக இருக்க கோப்பாய்க்கோட்டத்தின் சமூக பொருளாதாரப் பின்புலம் கிராம விவசாய பாரம்பரிய விழுமி யங்களைக்கொண்டதாக இருக்கின்றது. யாழ்ப் பாணம் நல்லூர் கோட்டங்களுடன் ஒப்பிடும் இடத்து கோப்பாய்க் கல்வி நிலமை மேலும் முன்னேற்றப் பட வேண்டியதாக இருக்கின்றது. இக்கோட்டத்திற்குள் தேசிய கல்விக் கல்லூரி கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆகி யன அமைவு பெற்றிருந்த பொழுது- இவை களின்செல்வாக்கு இருப்பது குறைவாகஉள்ளது.

கோப்பாய் கல்விக்கோட்டத்திலிருந்து 16 பாடசாலைகள் வழியாக 805 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் 256 பேர் க.பொ.த உயர்தரம் கற்கத் தகுதி பெற் றுள் ளதுடன்,270 பேர்கணிதம் , தமிழ் உட்பட 6பாடங் களிலும் அதற்கு மேலும் சித்தி பெற்றுள்ளன. கோப்பாய் கல்விக் கோட்டத்தில் க. பொ.த உயர் தர வகுப்புக்கு 31.80 % தகுதி பெற்றிருக்க யாழ்ப் பாணக் கோட்டத்தில் 63.03 % நல்லூர் கோட் டத்தில் 65.78% தம் தகுதி பெற்றுள்ளனர். கோப் பாய்க் கோட்டத்தில் பெறுபேறு மற்ற இரண்டு கோட்டங்களின் அடைவிலும் அரைவாசிக்குக் குறைவாகவுள்ளது. இக்கோட்டத்தில் இரண்டு மாணவர்களே 10A பெற்றுள்ளனர். இவர்க ளுள் ஒருவர் ஆவரங்கால் நடராசா இராமலிங் கம் வித்தியாலய மாணவன், மற்றவர் கோப்பாய் கிறிஸ்தவ் கல்லூரி மாணவர். கடந்த வருடமும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து ஒரு மாணவன் 10 A பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

கோப்பாய்கோட்டத்தில் 16 பாடசாலைகளில் இருந்து க.பொ.த. சாதாரண பரீட் சைக்கு 805 மாணவர்கள் முதல் முறையாக தோற்றினர். பாடசாலை ரீதியாக முதல் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக் கையும் க.பொ. த. உயர் தர வகுப் புக் கற்க தகுதி பெற்ற எண் ணிக்கை விபரமும் 6 பாடங்களிலும் அற்குக் கூடிய பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை விபரமும் தகுதி பெற்ற மாணவர் களின் விகிதமும் பின்வரு மாறு,

அட்டவணை: I

பாடசாலையின் பெயர்	தோற்றியோர் எண்ணிக்கை	க.பொ.த.உயர் தரத்திற்குத் தகுதி பெற்றோர்	6 பாடங்களி லும் அதற்கு மேலும் தகுதி பெற்றோர்	தகுதி பெற். றோர் விகிதத்தில்
அச்சுவேலி மகாவித்தியாலயம்	72	22	22	30.56
அத்தியார் இந்துக்கல்லூரி	80	32	32	40.00
இடைக்காடு மகாவித்தியாலயம்	31	12	12	38.71
கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி	98	35	35	35.71
கோப்பாய் மகாவித்தியாலயம்	17	01	01	5.88
ஸ்ரீசோமஸ்கந்தாக்கல்லூரி	112	37	38	33.04
உரும்பிராய் இந்துக்கல்லூரி	69	05	05	7.25
அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்	44	14	14	31.82
அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்	16	07	07	43.75
புனித திரோசா வித்தியாலயம்	36	19	19	52.75
ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்	18	06	06	33.33
ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தி	61	29	34	47.54
கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்	19	11	11	57.89
புத்தகலட்டி சரவணபவானந்த வித்தியாலயம்	20	04	06	20.00
ஊரெழு கணேசா வித்தியாலயம்	36	02	07	5.56
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்	60	08	08	13.33
வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்	16	12	13	75.00

பெறுபேறுகளை நோக்கும் பொழுது வாதர வத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் 16 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 12 பேர் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மிகவும் பின்தங்கிய கிராமப்பாட சாலையில் 81.3 % சித்தி பெற்றிருப்பது மிக வும் மகிழ்ச்சியைக்கொடுக்கின்றது.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியா லய, புனித திரேசா வித்தியாலயப் பெறு பேறு கள் 50 %த்திற்கு மேற்பட்டு இருக்கின்றன. உரும் பிராய் இந்துக்கல்லூரி 7.25 %, ஊரெழு கணேச வித்தியாலயம் 5.50 %, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் 13.33 % ,புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணுவித்தியாலயம் 20 % ஆகிய பாடசா லைகளின் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகள் 25 %-50 % இடைப்பட்டு காணப் படுகின்றன. அச்செழு சைவப்பிரகாச வித்தியா லயம்கடந்தவருடத்திலும் இவ்வருடம்ஓர ளவு சிறப் பாக செய்துள்ளதெனலாம். 2006இல் இப் பாட சாலையிலிருந்து 42 பேர் விண்ணப்பித்து32பேர் பரீட்சை எழுதி ஒரு மாணவனே சித்தி பெற்றி ருந்தார். இம்முறை 44 பேர் பரீட்சை எழுதி 14 பேர் தகுதி பெற்றிருப்பது மனதிற்கு திருப்தியைக் கொடுக்கின்றது. கோப்பாய்க் கோட்டத்தில் பரீட்சை எழுதிய 805 மாணவர்களுள் 55 பேர் (6.8 %) சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறி யுள்ளார்கள்.

கோப்பாய் கல்விக்கோட்டத்தின் க.பொ.த. (சா/த)2007 பரீட்சைப்பெறுபேறுகள் பாடரீதி யா கவும் தர அடிப்படையிலுமான விபரம் அட்ட வணை II இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை- II

பாடம்	தோற்றியவர் எண்ணிக்கை	A	B	C	S	W	சித்தி %
சைவம்	734	196	110	175	156	97	86.78
கத்தோலிக்கம்	57	11	13	20	11	2	96.49
கிறிஸ்தவம்	13	02	02	4	2	3	76.92
தமிழ்மொழியும் இலக்கியமும்	804	27	68	161	246	302	62.44
ஆங்கிலம்	804	07	16	02	82	678	15.67
விஞ்ஞானமும்தொழில்நுட்பமும்	803	11	31	93	165	503	37.36
கணிதம்	803	48	26	77	141	511	36.36
சமூகக்கல்வியும் வரலாறும்	804	38	48	150	202	366	54.48
சித்திரம்	39	04	3	31	126	225	42.16
சங்கீதம்	323	63	32	70	72	86	73.37
நடனம்	80	19	16	18	16	11	86.25
ஆங்கில இலக்கியம்	0	0	0	0	0	0	-
தமிழ் இலக்கியம்	462	60	52	87	98	165	64.29
வரலாறு	0	0	0	0	0	0	-
புவியியல்	497	07	21	74	151	241	51.51
அபிவிருத்திக் கல்வி	25	01	3	02	4	15	40.00
சுகாதாரமும் உடற்கல்வியும்	607	63	59	169	177	139	77.10
விவசாயம்	369	5	20	71	111	162	56.10
மனைவிஞ்ஞானம்	241	2	1	24	92	122	49.38
வர்த்தகமும் கணக்கியலும்	109	1	6	14	40	48	55.96
கட்டுமான தொழில்நுட்பம்	21	0	1	08	10	02	90.48
நாடகமும் அரங்கியலும்	59	6	6	20	23	04	93.22
மீன்பிடி	0	0	0	0	0	0	-
சுருக்கெழுத்து /தட்டச்சு	0	0	0	0	0	0	-
தகவல் தொழில்நுட்பம்	54	9	6	12	16	0	79.63

காணப்பட்டது. சில பாடசாலைகளில் சிறிய முன்னேற்றம் காணப்படினும் ஒட்டுமொத்த நிலையில் பெரிய மாற்றங்களை காணமுடிய வில்லை. அட்டவணை 4இல் பாடசாலை ரீதியாக கணிதப் பெறுபேறு காட்டப்பட்டுள்ளது.

கோட்ட கணித பெறுபேறு A 48 (6.0%) B 26(3.2 %) C 77(9.5) S 141(17.5%) W 511 (63.63%) உரும்பிராய் இந்துக் கல்லூரியில் 69 மாணவர்கள் கணித பாடத்திற்குத்தோற்றி 5 மாணவர்களே சித்தி பெற்று இருக்கின்றார்கள்.

இக்கோட்டத்தில் வரலாறு, மீன்பிடி, சுருக் கெழுத்து தட்டச்சு பாடங்களை ஒரு மாண வனும் எடுக்கவில்லை. தொகுத்து பாடப்பெறு பேறுகளை நோக்கின் இக்கோட்டத்தின் பரீட் சை பெறுபேறுகளின் பொதுப்பண்பை இனங் காண முடியும். 805 மாணவர்கள் தலா 10 பாட அல குகளுக்கு தோற்றினர். இதனடிப்படையில் 8050 அலகுப்பெறுபேறு பின்வருமாறு.

அட்டவணை III

தரம்	எண்ணிக்கை	விகிதம்
A	580	7.2
B	543	6.7
C	1301	16.2
S	1941	24.1
W	3685	45.8
	8050	100

இக்கோட்டத்தில் பரீட்சை எழுதிய மாண வர் கள் சராசரியாக 5.67 அலகுகளில் சித்தி பெற் றுள்ளனர். 3685 அலகுகளில் 45.8% சித்தி பெறவில்லை. மேலும் 580 அலகுகளில் 7.2மாத் திரமே A சித்தி பெற்றிருப்பது கவ னிக்கத்தக்கது.இது மிகவும் குறைவான அடைவு. மாணவர்கள் நடுத்தர, கீழ்மட்ட பெறுபேறுக ளைப் பெற்றே க.பொ.த.உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர். மாணவர்கள் சரா சரியாக 5.67 அலகுகளில் சித்தி பெற்றிருந்த பொழுது 31.80விகிதத்தினரே க.பொ. உ.தர சித்தி பெற் றதற்கு முக்கிய காரணம். கணித பாடத்தில் 36.36 %குறைவான சித்தி பெற்றி ருப்பதுவேயாகும்.

இக்கோட்ட க.பொ. த.(சா/த) பரீட்சை பெறு பேற்றை கணித பாட அடைவு பெரிதும் பாதித்து வருகிறது. 2006ஆம் ஆண்டிலும் இதே நிலை இதேபோல் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் 60 மணவர்கள் பரீட்சை எடுத்தபொழுதும் 46 மாணவர்கள் கணித பாடத்தில் சித்தி பெற வில்லை. இக்கோட் டத்தின் பிரபல முன்னணிப் பாடசாலையான புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல் லூரியில் 112 மாணவர்கள் பரீட்சை எடுத்த நிலையில் கணிதத்தில் 72 பேர் சித்திபெற வில்லை. கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, அத் தியார் இந்துக் கல்லூரி ,அச்சுவேலி மகாவித்தி யாலயம் போன்ற முக்கிய பாடசாலைகளிலும் கணித அடைவு குறைவாக இருப்பது கவலை தருவதாக இருக்கின்றது.

இக்கோட்டத்தில் ஆங்கில பாடத்தில் 15. 67 வீதமாணவர்களே சித்தி பெற்றுள்ளனர். ஆங்

அட்டவணை: IV

பாடசாலையின் பெயர்	தோற்றியவர் எண்ணிக்கை	A	B	C	S	W	சித்தி%
அச்சுவேலி மகாவித்தியாலயம்	72	05	0	3	16	48	33.33
அத்தியார் இந்துக்கல்லூரி	80	01	3	12	18	46	42.50
இடைக்காடு மகாவித்தியாலயம்	30	06	2	2	2	18	40.00
கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி	98	08	02	14	13	61	37.76
கோப்பாய் மகாவித்தியாலயம்	17	0	01	0	3	13	23.53
ஸ்ரீசோமஸ்கந்தாக்கல்லூரி புத்தூர்	112	08	05	12	15	72	35.71
உரும்பிராய் இந்துக்கல்லூரி	69	0	02	0	5	62	10.14
அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்	44	02	01	02	9	30	31.82
அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்	15	01	1	5	1	07	53.33
புனித திரேசாவித்தியாலயம்	36	02	05	08	4	17	52.78
ஆவரங்கால் மகா ஜனா வித்தியாலயம்	18	0	0	2	4	12	33.33
ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தி	61	08	03	07	16	27	55.74
கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்	19	04	01	02	05	07	63.16
புத்த கலட்டி சரவணபவானந்த வித்தியாலயம்	20	0	0	1	5	14	30.00
ஊரோழு கணேசா வித்தியலாயம்	36	0	0	1	6	29	19.44
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்	60	01	0	2	11	46	23.33
வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்	16	02	0	4	8	02	87.50
	803	48	26	77	141	511	

கில ஆசிரியர் பற்றாக்குறை , கிராமிய பின் புலம் , சமூக பொருளாதார பின்தங்கிய நிலை இக் குறை வான அடைவுக்கு பங்களித்திருக்க வேண்டும். 3 பாடசாலைகளில் ஒரு மாணவனும் ஆங்கிலத் தில் சித்திபெறவில்லை.

தமிழ் மொழியும் இலக்கியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் மாணவர்களின் பரீட்சை அடை வுகள் திருப்திதருவதாக இல்லை. தாய்மொழி யின் 37 % சித்திபெறத்தவறிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. சமயம், நாடகம் அரங்கியல் கட்டுமானத்தொழில்நுட்பம்,சங்கீதம் ஆகிய பாடங் களில் மாணவர்களின் பெறுபேறுகள் ஓரளவுக்கு திருப்திகரமாக இருக்கின்றது.

கோப்பாய்க்கோட்டத்தில் 805 மாண வர்கள் பரீட்சை எழுதி 256 பேர் க.பொ. உயர் தர வகுப்பு கற்கத்தகுதி பெற்றுள்ளனர். மிகுதி 549 பேரின் நிலை என்னவாகும். க.பொ. த சா/த சித்தி இல்லா மல் தற்பொழுது ஒன்றும் செய்யமுடியாது.

மேற்படிப்பு, அரச ,தனியார் துறை வேலைவாய்ப் புகள் எல்லாவற்றுக்கும் க.பொ.த.சாதாரண தர கணிதம்,தாய் மொழி ஆகிய பாடங்களில் Cசித்தி பெற்றவர்களிடமிருந்தே கேட்கப்படுகின்றது. இதனால் பரீட்சையில் சித்தி பெறாத மாணவர் கள் மீண்டும் பரீட்சை எடுத்து க.பொ. தசாதாரண சித்தி பெற்றே ஆக வேண்டும் அல்லது அவர்க ளுக்கு மேல் கல்வி கிடைக்காது போய்விடும் .அத்து டன் வேலை வாய்ப்பு பெறுவது பெரும் பிரச்சினை களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இன்றைய பொருளாதார கட்டமைப்பு அறிவு சார்பாக அமைந்து வருகின்றது. இக்கட்ட மைப் பில் தனியாளின் வளர்ச்சியோ கிராமத்தின் வளர்ச்சியோ நாட்டின் முன்னேற்றமோ உயர்

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

கல்வி இல்லாமல் ஏற்படமுடியாது. இன்றுநாட்டின் எதிர்காலம் முன்னர் வயல்களிலோ தொழிற் சாலைகளிலோ தங்கியிருக்காமல் வகுப்பறை களில் தங்கியுள்ளது. இதனால் பிள்ளைக ளின் கல்வியில் குறிப்பாக அவர்கள் 3ஆம்நிலைகல்வி வரை செல்வதற்கான அடிப்படை அத்திவாரத்தை இடவேண்டிய நிலையில் உள்ளோம். இந்நிலை யில் ஒவ் வொரு மாணவனும் க.பொ. த சாதா ரண சித்தி பெற்று இருக்கவேண்டும். இல்லாது விட்டால் உயர் கல்வியைப்பெற முடியாது.தொழிற் படை யில் சிறந்த பணியை செய்ய முடியாது .

கோப்பாய்க்கல்விக்கோட்ட கல்வியில் பின் தங்கி நிற்பது மிகவும் கவலை தருவதாக இருக் கின்றது. பரீட்சையில் சித்தி பெறாத பிள்ளை கள் கல்வியைத் தொடர ஆவன செய்ய வேண்டும். இரண்டாம் முறை பரீட்சை எழு தும் மாணவர்க ளின் அடைவும் திருப்திகர மாக இல்லை. இதனால் இரண்டாம் முறை பரீட்சை எடுக்கும் மாணவர்க ளுக்கு புதிய முறையில் ஆலோசனை வழங்கி அவர்களின் பெறு பேறுகளை உயர்த்தி அவர் களை கல்விப் புலத்தில் வைத்திருக்க நடவடிக் கைகள் எடுக்க வேண்டும்.இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னர் போல் இல்லாமல் போதிய ஆசிரியர் வளம் இருக்கின்றது. சராசரி 20 பிள் ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில் இருக்கின்றது. மேலும் ஆசிரியர்கள் இளம் பட்ட தாரிகளாகவும் கல்வியியல் கல்லூரி டிப்ளோமா தாரிகளாகவும் இருக்கின்றனர். இத்தகைய இளம் கல்வித்தரமுடைய ஆசிரிய அணி இருந்தும் கோப்பாய் கல்விக்கோட்டம் கல்வியில் பின் நிற்பது கவலை தருகின்றது. அண்மைக் காலங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வித்துறையில் அரச , அரச சார்பற்ற நிறுவனங்களால் பல துறை களில் பெருமளவு முதலிடப்பட்டுள்ளது. பல் வேறு உதவித்திட்டங்கள் மூலம் பௌதிக கட்டு மான வளர்ச்சி உணவுத்திட்டம் , கற்பித்தல் உப கரணங்கள் என பல வளர்ச்சித்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன.இத்திட்டங்களினால் ஏற்பட்ட நன்மைகள் மாணவர்களின் பரீட்சை பெறு பேறு களில் தெரியவேண்டும். ஆனால் கோப்பாய் கோட்டத்தில் பெரும் மாற்றங்களை ஏற் பட்டுள்ள தாகத்தெரியவில்லை.கோப்பாய் கல்விக் கோட்ட இன்றைய கல்விப் பின்னடைவை நீக்க கல்வி அதிகாரிகள், அதிபர்கள் , ஆசிரியர்கள், பெற் றோர்கள், பாடசாலை கள் ,அபிவிருத்திச் சபைக ள், பழையமாணவ சங்கங்கள்,சிவில்சமூகஅமைப் புகள் இணைந்து தீவிரமாக புதிய அணுகுமுறை யில் செயலில் இறங்கவேண்டும். கோப்பாய் பிரதேச பிள்ளைகளுக்கு கல்வி ஊடாக நல்ல எசிர்காலக்கை கொடுக்க பாடுபடுவோமாக.

கட்டுப்பாட்டு விலையில் அரிசியினை விற்பனை செய்யாத வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை

வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நுகர்வோரைப் பாதுகாக்கவே பாராளுமன்றத்தில் சட்டங்கள் நிறை வேற்றப் படுகின்றனவே தவிர வர்த்தகர்களைப் பாது காப்பதற்காகவல்ல. எனவே அரசாங்கம் அறிவித்துள்ளகட்டுப்பாட்டுவிலைகளில்அரிசி யினை விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்ற வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு விவகார அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்தார்.

அரசாங்கம் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை விதித்ததையடுத்து அரிசி மொத்த வியாபாரி கள் கடைகளை மூடி எதிர்ப்பு தெரிவித்து வரு கின்றமை குறித்து அமைச்சரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்ததாவது, பாராளுமன்றத் தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நுகர் வோரை பாதுகாப்பதற்காகவே நிறைவேற்றப் பட்டது. வர்த்தகர்களை பாதுகாப்பதற்காக அந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. அர சாங்கம் ஜனவரி மாதமே அரிசியை அத்தியா வசியப் பொருளாக பிரகடனம் செய்தது எனவே அரசு கட்டுப்பாட்டு விலைவிதிப்பது நியாயமற்றதென வர்த்தகர்களால் குற்றம் சாட்ட முடியாது. சித்திரைப் புத்தாண்டும் முடிந்த பின்னரே கட்டுப்பாட்டு விலை நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வர்த்தகர்கள் அரிசியை விற்பனை செய்யவேண்டும். மொத்த சில் லறை விற்பனையாளர்கள் உட்பட பூட்சிற்றி விற்பனை நிலையங்களும் இதனை கடைப் பிடிக்கவேண்டும் அதனை விடுத்து அரிசியை பதுக்கி வைத்திருப்பது, கடைகளை மூடுவது போன்றவை சட்டவிரோதமான செயற்பாடா கும்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது நுகர்வோர் பாதுகாப்பு சட் டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்தோடு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அரிசியை அதிக விலைக்கு விற் பனை செய்வோர் பதுக்கி வைத்திருப்போர் தொடர்பாக திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாட்டில் அரிசிக்கு எதுவிதமான தட்டுப் பாடும் இல்லை. மக்களுக்கு நியாயமான விலை யில் அரிசியை வழங்கவே கோப் சிற்றி களை அரசாங்கம் ஏற்படுத்தியது. வர்த்தகர் கள் அடம்பிடித்தால் நாடு முழுவதிலுமுள்ள 11ஆயிரம் கூட்டுறவுக் கடைகள் மூலம் நியாய மான விலையில் பொதுமக்களுக்கு அரிசியை வழங்கநடவடிக்கை மேற்கொள்ளப்படும். (அ-5)

தேசப்பற்றுள்ள தேசிய இயக்க உறுப்பினர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டனர்

குணதாச அமரசேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பிக்குள் ஏற்பட்டிருந்த பிளவுகள் தற்பொழுது அதனைச் சார்ந்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்திற்குள்ளும் பரவியுள்ளது. ஜே.வி.பியின் அதிருப்தியாளரான விமல் வீர வன்சவால் இந்தப் பிரச்சினை பரவியிருப்ப தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் பண்டாரகமவில் ஜே.வி.பி உறுப்பினர்களால் தாக்கப்பட்டதாகப் பொலி ஸார்தெரிவித்துள்ளனர். தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் களுத்துறை மாவட்ட அமைப் பாளரான ஹேமந்த பெரேரா என்பவரே ஜே. வி.பியினரால் தாக்கப்பட்டிருப்பதாக அந்த அமைப்பின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். தாக்குதலுக்குள்ளானவர் பண்டாரகம வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகத் தெரிவித் துள்ளார்.

சமூகமயப்படுத்தப்பட்ட அமைப்பொன்றின் மீது இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படுவது கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிட்டிருக்கும் அமரசேகர கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச் சினை கட்சிக்குள்ளேயே தீர்க்கப்படவேண்டும் இவ்வாறுநடந்துகொள்வது சரியான தல்ல இது முட்டாள்தனமான நடவடிக்கை எனக் கூறியுள் ளார்.

இதேவேளை, ஜே.வி.பி.பாராளுமன்றக் குழுத்தலைவர்விமல் வீரவன்சமற்றும் அதிருப் திக்குழு உறுப்பினர்கள் தேசப்பற்று முன் னணி எனும் அமைப்பொன்றை உருவாக்க இருப்ப தாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்துடன் இணைந்தே இந்த அமைப்பு செயற்பட இருப்ப தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-5)

ராஜபக்ஷ சகோதரர்களின் தேவைகளை பொலிஸ் மாஅதிபர் நிறைவேற்றுகிறார்

லண்டனில் மங்கள சமரவீர உரை

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்புபட்ட சம்பவங்களின் போது மிகவும் தயங்கித் தயங்கி செயற்பட்ட பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேரா தற்பொழுது ஜே.வி.பியின் திரு கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ஜயந்த விஜயசேகரவை கைதுசெய் வதில் துரிதமாகச் செயற்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் ஏற்பாட் டாளர் மங்கள் சமரவீர தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ சகோதரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே பொலிஸ்மா அதிபரும் சட்டமா அதிபரும் செயற்பட்டு வரு வதாக லண்டனிலுள்ள இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றிய மங்கள சமரவீர கூறியுள்ளார். எதிர்காலத்தில் சிறந்த பதவி களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இவர்கள் இவ்வாறு செயற்படுவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஜே. வி.பி போட்டியிட்டால் சிங்கள வாக்குகள் கிடைக்காது என்று பயமடைந்திருக்கும் அர சாங்கம் அவர்களைப் பழிவாங்கும் நடவடிக் கையில் ஈடுபட்டிருப்பதாக மங்கள சமரவீர கூறியுள்ளார். ஜே.வி.பியின் திருகோண மலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர கைது செய்யப்பட்டமை யானது அவரது அடிப்படை உரிமையை மீறும் செயற் பாடெனக் கூறியுள்ளார்.

ஜே.வி.பிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படுமெனவும் மங்கள சமர வீர மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

விளையாட்டுப் போட்டி

உடுவில் பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக் கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் 1ஆம் நாள்நிகழ்வுகள் இன்றுகாலை 7மணிக்கு ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் அனைத்து கழ கங்களின் வீர, வீராங்கனைகளையும் தவ றாது சமூகமளிக்குமாறு வலி தெற்கு, உடு வில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ் சுளா தேவி கேட்டுள்ளார்.

ஈழத்தமிழர்களை காக்க அனைவரும் ஒன்று படுவோம்

திராவிடக் கழகத்தலைவர் வீரமணி அழைப்பு

(கொழும்பு)

ஈழத்தமிழர்களைக்காக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் என திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அழைப்பு விடுத்துள் ளார். கடந்த மாதம் 19ஆம் திகதி முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரி யங்கா காந்தி வேலூர் மத்திய சிறைக்கு சென்று ராஜீவ் படுகொலையில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள நளினியை சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பு குறித்து அறிக்கை வெளி யிட்டிருக்கும் வீரமணி நளினியின் தூக்குத் தண்டனையைஆயுட்தண்டனையாககுறைக் குமாறு கோரிய சோனியா காந்தி மற்றும் நளி னியை சந்தித்துள்ள பிரியங்கா காந்தியின் மனித நேயத்தை பாராட்டியுள்ளார்.

ராஜீவ் கொலையை வைத்து விடுதலைப் புலிகளுக்கும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகவும் கருத்துக்கூறிவருபவர்கள் இனியாவது திருந் துவார்களா எனவும் அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நோர்வே, இந்தியாவை இலங்கை விவ காரத்தில் தலையிடும்படி அண்மையில் அழைப்புவிடுத்துள்ளது போன்று இந்திய மத்திய அரசும் ஈழத்தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு தலையிட வேண்டும் எனவும் வீர மணி அழைப்பு விடுத்துள்ளார். (அ-5)

அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன் னிரு திருமுறைப்பாரா யணம் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணிக்கு மன்றத் தலை வர் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் யாழ்ப்பாணம் பலாலி வீதி இந்துசமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெரு மான் திருக்கோயிலில் இந்துசமய பேரவையின ரின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. (ஓ-7)

சிறுவிளம்பரம்

மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ (V) குடும்பம் கனடா பிரசா உரிமையுள்ள 28 வயது, கிரக பாவம் 30, பூசம், கடகராசி உடையவருக்கு படித்த அழகான மணப்பெண் தேவை.

தொடர்பு:-0602219004 (104)

தேவை

குவைத், டுபாய், சவூதி, கட்டார் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் அனுபவம் உள்ள, அனுபவம் அற்ற இருபாலாருக்கும் வேலைவாய்ப்புகள் உண்டு விபரங்களுக்கு.

LOTUS JOBS BANK
No.10, Rudra Mawatha
Wellawatta Colombo-06.
0112361336, 0112362096.
Licence No 2077

சேவை

Canada, UK, Australia, Newzealand, Germany, Swiss, France போன்ற நாடுகளுக்கு Settlement, Student, Work Permit, Tourist, Family Visit போன்ற Visa க்களுக்கு விண்ணப்பிக்க முன்னரும். விண்ணப்பித்து காலதாம தமாகியோ.நிராகரிக்கப்பட்டோ இருப்பினும் Visa பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனை பெறுவதற்கு.

LOTUS JOBS BANK NO.10,Rudra Mawatha, Wellawatta Colombo 06. T.P. 0112362096, 2361336.

ST.JOHN' S COLLEGE JAFFNA

VOCATIONAL TRAINING UNIT

ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

Course Content: **Listening, Speaking, Reading & Writing**
Applications are invited from School Leavers for the above course.
Classes will be conducted on weekdays at 2.30 p.m.

Commencement : Monday 5 th May 2008
Duration : 3 Months
Application Forms could be obtained from the College Office from Monday 21 st April 2008

Closing Date: Wednesday 30th April 2008

Revd N.J.Gnanaponrajah
PRINCPAL
ST. John' s College
Jaffna.
Srilanka

(C/1036)

ஒளி விளக்குகள் வைத்திருப்போர் மற்றவர்க ளுக்கு அவற்றை வழங்கி செல்வார்களாக.
–பிளேட்டோ

வலம்புரி

ரவிசங்கர் சுவாமிகளின் சமாதானப் பணியை வரவேற்போம்

இலங்கையில் நிலவும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியையும், சமாதானத்தை யும் ஏற்படுத்தத் தாம் தயாராக இருப்பதாக இந் தியாவின் ஆன்மிகக் குருவான ஸ்ரீஸ்ரீ ரவிசங் கர் சுவாமிகள் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ரவிசங்கர் சுவாமிகள் இலங்கை இனப்பிரச் சினையில் சமாதான ஏற்பாட்டாளராகச் செயற் பட வேண்டும் என கடந்த பதினான்காம் திகதி வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப் பிட்டிருந்தோம்.

இதற்கு முன்னதாக, சமாதான முயற்சியில் ரவிசங்கர் சுவாமிகள் ஈடுபடுவார் என வலம்புரி செய்தி வெளியிட்டிருந்தமையும் இப்போது சுவாமி கள் சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட தான் தயார் எனக் குறிப்பிட்டிருப்பதும் மனதுக்கு ஆறு தல் தருவதாகவுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சி வெற்றி பெற முடியாமல் போனமைக்கு இந்திய மத்திய அர சின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்காமையே மூல காரணம் எனக் கூறுவோரும் உளர். அதில் நியாயப் பாடும் இருக்கவே செய்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை இந்தியாவின் அனுசரணையின்றி அல்லது அந்த நாட்டின் ஒத்துழைப்பு இன்றி தீராது என்னும் கருத்திய லின் அடிப்படையில், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமி கள் அவர்கள் சமாதான அனுசரணைப் பணி யை மேற்கொள்வது வெற்றியை அடைவதற்கு வழிசமைக்கும் என்றே கூறவேண்டும்.

சுவாமிகளின் சமாதானப் பணிக்கு இந்தியா வின் ஆதரவு கிடைக்கும் என்பது சர்வநிச்சயம். அதேபோல் சுவாமிகள், மதம் கடந்த –தேசம் கடந்த ஆன்மிகக் குருவாக விளங்குகின்றார்.

உலகின் நூற்றைம்பதிற்கு மேற்பட்ட நாடுக ளில் சுவாமிகளின் வாழும் கலை அமைப்புகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எனவே அவர் பக்க சார்பின்றி, சாதாரண மனித விருப்பு வெறுப்புகள் கடந்த ஒருவராகவே உலக மாந்தர் களால் போற்றப்படுகின்றார் – வழிபடப்படுகின் றார்.

அத்தகையதொரு ஆன்மிகக் குரு, இலங்கை இனப்பிரச்சினையில் சமாதான ஏற்பாட்டாளராக பணியாற்றுவது சாலப்பொருத்துடையதாகும்.

எனவே அவரின் சமாதானப் பணியை இலங் கை அரசும் விடுதலைப் புலிகளும் வரவேற்க வேண்டும்.

குறிப்பாக யுத்தத்தில் வெற்றி கண்டுவிடுவோம் என்ற மீள் பரிசீலனைக்குட்படுத்த முடியாத கொள்கையுடன் செயற்படும் இலங்கை அரசு, சுவாமிகளின் சமாதானப் பணியை வரவேற்கத் தயாராக இருக்கவேண்டும்.

சுவாமிகளின் சமாதானப் பணியை வரவேற் கத் தவறும் சந்தர்ப்பமானது எதிர்கால அமை திக்கும், சமாதானத்திற்கும் கேடாக அமையும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இறைமகனைத் தேடும் மானிடத்தை ஆற்றுப்படுத்திய 'திருப்பாடுகளின் காட்சி'

தேடல்கள் இன்றி வாழ்க்கை இல்லை, ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஓர் தேடல் உள்ளது. இத்தேடலில் எல்லாம் உயர்ந்த தேடலாக மனிதன் தன்னைத் தானே தேடும் ஓர் மனவுலக ஆராய்ச் சியில் ஈடுபடுகின்றான். இவ்வித ஆராய்ச் சியில் அவன் கண்டுகொள்ளத் துடிக் கும் பல உண்மைகளுடே 'மனிதம்' பற்றிய தேடல் முதன்மை பெறுகின்றது.

மனிதத்தைத் தேடும் மானிடருக்கு இறைமைந்தன் கிறிஸ்துவின் வாழ்வுப்

பயணம் உற்சாகத்தையும் நம்பிக்கை யையும் தருகின்றது. கிறிஸ்துவின் பாடு கள், மரணம், உயிர்ப்பு ஆகிய மறை உண்மைகளை உள்ளடக்கிய 'திருப் பாடு களின் காட்சி' எனும் உன்னத காவியம் திருமறைக் கலாமன்றம் ஆண்டு தோறும் தயாரித்து வழங்கிவருகின்ற பக்திபூர்வ மான கலைப்படைப்பாக விளங்குகின் றது. எவ்விதமான நெருக்கடிமிக்க புறச் சூழல்கள் இருந்தபோதிலும் கூடிய ஆளணி வளம், நிறைவான காட்சியமைப் புக்கள் என்பவற்றை உட்படுத்தி நேர்த் தியுடனும், செயற்றிறனுடனும் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றி வருகின்ற பெருமை திருமறைக் கலாமன்றத்தையே சாரும். இவ்வாண்டு 'காவிய நாயகன்' எனும் நாமதுடன் திருப்பாடுகளின் காட்சி யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் அண்மையில் மேடையேற்றப்பட்டது.

'காவிய நாயகன்' ஆற்றுகை நிகழ்வு வெவ்வேறு தேடல்களுடன் வாழும் மனி தர்களின் ஏக்கத்துடன் அவர்களின் புதி ரான ஆனால் நியாயமான வினாக்களு டன் ஆரம்பமாகியது. இறைவன்-மனி தன்-மனிதம் என்ற மூவித எண்ணக் கருக்களும் உரைஞர்களின் தேடல்களாக இருந்தன. 'இறைவா! நீ இருக்கிறாயா?' 'மனிதா! நீ இருக்கின்றாயா?' மனிதமே! உன் உறைவிடம் எது உன்னை நான் பார்க்க வேண்டும்! உன்னை நான் உணர வேண்டும்!... இவ்வாறு ஆற்றுகையின் ஆரம்பத்தில் அரங்கில் ஒலித்த வார்த் தைகள் பார்வையாளர்கள் அனைவரை யும் இயல்பாகவே நிகழ்வுடன் ஒன்றி ணையச் செய்தது. மரண ஓலங்களும், நின்மதியற்ற வாழ்வின் விரக்தி அனுப வங்களும், பாதுகாப்பற்ற வாழக்கைச் சூழலும் தொடர்கின்ற வேளையில் இத் தகைய கேள்விகள் மனிதரின் உள் ளத்தில் அடிக்கடி உச்சரிக்கப்பட்டுக் கொண் டிருக்கின்றன. 'காவிய நாயகன்' ஆற் றுகையின் ஆரம்பம் சிறப்பாக அமைந் திருந்ததுடன் பார்யைாளரை சிந்திக்கத் தூண்டுவதாகவும் அமைந்தது.

'வாருங்கள்.... இறைவனைத் தேடும் நீயும், மனிதனைத் தேடும் நீயும், மனிதத் தைத் தேடும் நானுமாக இணைந்து தேடுவோம்.....' என ஓர் உரைஞர் குறிப் பிடும்போது உரைஞர்கள் மட்டுமல்ல பார்வையாளர்கள் அனை வருமே இத் தேடலில் ஆர்வத்துடன் பங்கு கொள்ள விளைந்ததை பார்வையாளர்களின் முகங்கள் கோடிட்டுக்காட்டின.

இறைவனுக்கும் மனிதனுக்கும் பாலம் அமைத்து என்றும் அழியாத இறை உறவை ஏற் படுத்திய இயேசு கிறிஸ்து எவ்வாறு இறைவனாக, மனித னாக, மனிதத்துடன் இணைந்து வாழந் தார் என்பதை 'காவிய நாயகன்' வெளிப் படுத்தி நின்றது. வழக் கமாக இயேசுவை மெலிந்த தோற்றத்து டன், தலைமைக் குருக் கள் மற் றும் ஆளு னன் பிலாத்து முன் னிலையில் கூனிக்குறுகி நிற்கும் ஒருவ ராக சித்தரிக்கப்பட்டு வந்தநிலையில் இம் முறை உடல்தோற்றம், குரலின் தொனித உடல்வெளிப்பாடுகள் யாவும் உண்மை யிலேயே யூத தலைமைச் சங்கத்திற்கும் அதிகாரவர்க்கத்திற்கும் சவால் விடுப் பதாக அமைந்திருந்தமை 'காவிய நாய கன்' என்ற பெயரிற்கு ஓர் புதிய அந் தஸ் தைக் கொடுத்தது என்றே சொல்ல வேண் டும். பாவிகளை மன்னிக்கும் இரக்க சிந் தையுள்ள இயேசு நிறைந்த ஆற்றலும் ஆளுமையும் பொருந்திய சரா சரி மனி தனாகவும் இவ்வுலகில் மனிதனோடு மனிதனாக வாழ்ந்தார் என்பதை இவ்வாற்று கையில் தோன்றிய இயேசு எம் முன் படம் பிடித்து காண்பித்தார்.

ஒவ்வொரு வருட மும் நிகழ்த்தப்படு கின்ற- பெரும்பாலும் ஒரே காட்சிகளைக் கொண்டதாக திருப் பாடுகளின் காட்சி திரும்பத்திரும்ப மேடை யேற்றப்படுகின்ற போதி லும் 'காவிய நாயகன்' ஆற்றுகையின் ஆரம்பத்திலிருந்து முடிவுக்காட்சிவரை பார்வையாளர் யாவரும் வெகு ஆர்வத்து டன், புதுமையை இரசிக்கும் முகபாவ னையுடன் அரங்கில் குழுமியிருந்தனர். வேடிக்கை விநோத நிகழ்ச்சியை ஆர வாரத்துடன் இரசிப்பது போன்றல்லாது பார்வையாளர்கள் யாவரும் அமைதியுடன் பக்திபூர்வமாக ஆற்றுகையுடன் இணைந் திருந்தனர். நடிகர்கள் ஒவ்வொரு வரும் கலைஞர்களாக அன்றி தமது பாத்திர மாகவே மாறி உரிய வகிபங்கை சிறப் பாக மேற்கொண்டிருந்தனர். வேட உடைகள், ஒப் பனை மற்றும் நடிகர்க ளின் எண் ணிக்கை என்பவை அரங்கில் பெருங்காட்சிப் பண்பை நிலைநிறுத்தி யது. உயி ரோட்டமுள்ளதாக , தத்ரூபமாக ஒவ்வொரு காட்சிகளும் குறிப்பிட்ட நேரத் திற்குள் ஒழுங்குமுறை தவறாது வடி வமைக் கப்பட்டு இருந்தன. குறிப்பாக இயேசு ஆற்றிய புதுமைகளின் காட்சி கள், வெற்றிமுழக்கத்துடன் இயேசுஜெரு சலேமில் பவனிவருதல், பிலாத்துவின் அரண்மனைக் காட்சி, இயேசுவின் உயிர் ப்பை மகிழ்சியுடன் வெளிப்படுத்தும் வான தூதரின் நடனக்காட்சி என்பவை விசேட கவனஈர்ப்பை பெற்ற காட்சிகளாயின.

பார்வையாளனின் பார்வையில்

பிலாத்துவின் அரண்மனையில் இயேசு விசாரிக்கப்பட்டபோது இயேசு-பிலாத்து என்ற எதிரும் புதிருமான இரண்டு பாத்திரங்கள் நேருக்குநேர் சந்திக்கின்ற காட்சி அபரிமிதமாக அமைந்தது பிலாத்து வின் நடிப்புத்திறன் விதைந்துரைக்கப் படக் கூடியதாக அமைந்தது. இயேசு-பிலாத்து உரையாடலில் 'உண்மையா! அது என்ன?' என்ற பிலாத்துவின் வேடிக் கையான கேள்வி நகைச்சுவையாக இருந் தாலும் பார்ப்போரை சிந்திக்கவைக்கும் வினாவாக இருந்தது.

'காவிய நாயகன்' ஆற்றுகையில் ஒளியமைப்பு சிறப்பாக மேற் கொள்ளப் பட்டது போலவே ஒலியமைப்பு நன்றாக அமைக்கப்பட்டிருந்தது. நடிகர்கள் ஒவ் வொருவரினதும் வார்த்தை உச்சரிப்புக் கள் தெளிவாக இருந்தன. பின்னணி இசை மற்றும் பின்னணி பாடல்கள் என் பவை அரங்க ஆற்றுகையுடன் நன்றாக பொருந்தி ஒத்துழைத்தது.

'காவிய நாயகன்' ஆற்றுகையானது மக்களின் மனங்களில் ஆநீதிகள், அக் கிர மங்கள், மனிதாபிமான மற்ற செயல்

களுக்கு எதிராக அன்பு, நீதி,மன்னிப்பு என் பவற்றை விதைத்து அதனூடாக 'மனிதம்' இன்னும் வாழ்கின்றது என்னும் நம்பிக் கையை ஊட்டுவதாக அமைந்தது. நன் மையை தீமை ஆட்கொள்வதும், இருள் ஒளியை மறைப்பதும் தற்காலிகமான வையே.

எஸ். அல்பேட் நீகன்
உளவியல் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

ஆயினும், ஒளியின் ஆட்சியில் நன்மைத்தனம் உயிர்பெற்று புதுவாழ்வு கிடைக்கும் எனவே எமது வாழ்வில் நாம் சத்தியத்தைக் கண்டறிந்து அதை நாடித் தேடுவதே எம் வாழ்வை மேம்படுத் தும் என்பதே 'காவிய நாயகன்' தரும் நற்செய் தியாகும்.

அமைச்சர் ஜெயராஜ் படுகொலையில் இரு பெண்களுக்குத் தொடர்பு

ஜனாதிபதிக்கு பொலிஸ்மா அதிபர் அறிக்கை

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலை தொர்பாக பொலிஸாரால் நடாத்தப்பட்ட முதற்கட்ட விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதி பரால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்விடம் வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள் ளது.

அமைச்சருக்கு வழங்கப்பட்ட பாது காப்பு மற்றும் படுகொலை இடம் பெற்ற இடம் தொடர்பான தகவல்கள் மேற்படி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அமைச்சரின் வருகை குறித்து பாது காப்பு பிரிவினரும் விஷேட அதிரடிப் படையினரும் உரிய பொலிஸ் அதிகாரி களுக்கு அறிவித்திருக்கவில்லை என்று பொலிஸார் இது வரை மேற்கொண்ட விசா ரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, வெலிவேரிய பிரதேசத் தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் இரு பெண்கள் தொடர்புபட் டிருப்பதாக இரகசிய பொலிஸார் மேற் கொண்டுள்ள விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. பாலர் பாடசாலை யொன்றின் ஆசிரியை மற்றும் தகவல் தொடர்பு நிலையம் ஒன்றில் சேவையாற்றி வரும் யுவதி ஒருவருமே இத்தாக்கு த லுடன் தொடர்பு பட்டுள்ளனர். இவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்த போதிலும் அவர்கள் தமது இருப் பிடங்களிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக இரகசிய பொலிஸார் மேற்கொண்ட விசா ரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

வெலிவேரிய பிரதேசத்தில் நடைபெற விருந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் அமைச்சர் கலந்து கொள்வதான தக வலை அடுத்து அவர்களிருவரும் அங்கு சென்று அப்பிரதேசம் குறித்த விபரங்களைத் திரட்டி யிருப்பதாகவும் அவ் விபரங்கள் விடு தலைப் புலிகளிடம் தெரிவிக்கப்பட்டுள் ளதா கவும் இரகசிய பொலிஸார் சந்தேகிக்கின் றனர். (அ-5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்

படையினர்...

திருகோணமலை, தம்பல காமம் பொக்குரணிப் பகுதியில் நேற்று அதிகாலை 5.50 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இக்கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

தமது போர்...

நாடுகள் சபை நிறுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஐ.நா. அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும், உண்மையான களநிலையை மாற்றும் வகையில் பிரசாரங்களை மேற்கொள்ளுமாறு ஐ.நா அதிகாரிகளிடம் விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ந-5)

தம்பலகாமத்தில் கிளைமோர் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் நேற்றுக்காலை பாதுகாப்பு தரப்பினரை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

வீதி ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாணசபை தேர்தல் பிரசார பணிக்காக கொழும்பிலிருந்து அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சிகளினதும் முக்கிய பிரமுகர்கள் சிலர் நேற்றைய தினம் திருகோணமலைக்கு செல்லவிருந்தனர்.

இந்நிலையிலேயே நேற்றுக்காலை கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-5)

தற்காலிக...

அவர் குறிப்பிட்டார். அத்துடன் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் தமது நீடிப்புத் தொடர்பாக தற்போது இணைப்புப்பெற்ற பாடசாலை அதிபரிடம் பதிவு செய்தால் போதுமான தெனவும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ந-5)

ஜே.வி.பியின் கட்சி...

பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் தமது தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக ஜே.வி.பியை தமது சட்டைப்பைக்குள் போட முயன்றதாகவும் அது முடியாமல் போகவே தமது கட்சியை பிளவுபடுத்த முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

விமல் வீரவன்ச மூலமாக தமது கட்சியை கட்டுப்படுத்தவும் தமது அரசியல் அபிலாசைகளுக்கு தாளம் போட வைக்கவும் மகிந்த ராஜபக்ச முயற்சித்ததாகவும் அது கைகூடா நிலையில் விமல் வீரவன்சவை கட்சியிலிருந்து வெளியகற்றி தம்முடன் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

(ந-5)

புலிகளை ...

வரும் நிதி சேகரிப்பு மற்றும் பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக இச்சந்திப்பின் போது அமைச்சர் ரோகித போகொல் லாகம, ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க அமைச்சருக்கு விளக்கிக் கூறினார்.

புலிகளின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க அமைச்சுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் அமைச்சா ரோகித போகொல்லாகம நன்றி தெரிவித்ததோடு அந்நாட்டில் இயங்கி வரும் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் பற்றி விழிப்புடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

பயங்கரவாத அமைப்புக்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் மூலமாக ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு தேவையான சகல முன்னெடுப்புக்களையும் தமது நாடு ஏற்கனவே மேற்கொண்டுள்ள தாக ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

அமைச்சர் மைத்திரி...

டலஸ் அழகப்பெருமவின் அரசியல் தலையீட்டை அடுத்தே மங்கள சமரவீரவின் அமைச்சு பதவி ஜனாதிபதியால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அமைச்சர் டலஸ் அழகப்பெரும தன்னை குறிவைத்துள்ளதாகவும் விரைவில் தனது அரசியல் வாழ்வு முடிபுக்கு வந்துவிடுமென அஞ்சுவதாகவும் மைத்திரிபால சிறிசேன கவலை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை எதிர் கொள்ளக்கூடிய ஆற்றல் மங்கள சமரவீர வீடமே இருப்பதால் மீண்டும் அவர் தமது கட்சியில் இணைந்துகொள்ள வேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தி உள்ளார்.

சுதந்திரக்கட்சியில் மீள இணைந்து கொண்டு அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் அதிகாரத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ந-5)

2008 தரம்:5 வெற்றித்தேர்வு
2008 தரம்:4 வெற்றித்தேர்வு

வெற்றித்தேர்வு திருமலை S.கணேசலிங்கம் அவர்களின்

தரம்: 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான நாட்டின் முதற்தர பயிற்சி வினாப்பத்திரம். வெற்றித்தேர்வு ஒன்றுதான்.

தேர்ச்சிபெற்ற அனுபவம்வாய்ந்த ஆசிரியரால் தயாரிக்கப்படுவது, சரியான விடையுடன், இலவசகையேட்டுடன்

2005,2006,2007 புல ஆயிரக்கணக்கான மாணவர்களை சிறப்புச் சித்திபெற வைத்த ஒரேயொரு வினாப்பத்திரம் வெற்றித்தேர்வு.

பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்கு விசேட சலுகை.

தரம்: 4. 15 வினாப்பத்திரங்கள், தரம்: 5. 25 வினாப்பத்திரங்கள்

வெற்றித்தேர்வு வினாப்பத்திரம் செய்வோருக்கே சுருத்தரங்கு நடைபெறும்.

T.P. 021 222 9016

சகல புத்தகசாலைகளிலும் கணேசலிங்கத்தின் வெற்றித்தேர்வு என்று கேளுங்கள்

தரம்: 4 வெற்றித்தேர்வு – 1, 2 .. தரம்: 5 வெற்றித்தேர்வு – 1 முதல் 12 வரை.

தொடர்புகள் பெற இன்றே பதிவு செய்யுங்கள். முந்துங்கள்.

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வசித்து வருஷம் பங்குனி மாதம் 30ஆம் நாள் (12.04.2008) சனிக்கிழமை பூர்வ பட்க்ஷ சப்தமித் திதியில் சிவபதமடைந்த எமது தந்தையும், குடும்பத்தலைவருமான

அமரர்

பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள்

(முன்னாள் பிரதம குரு, அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் கோவில்)

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் எமது இல்லத்தில் நடைபெறும்.

21.04.2008 சித்திரை மாதம் 9ஆம் நாள் திங்கட்கிழமை தசாகம் (காலை 10.00 மணி)
22.04.2008 சித்திரை மாதம் 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்.
23.04.2008 சித்திரை மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை சபிண்டீகரணம்.
24.04.2008 சித்திரை மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை கிருஹயக்ஞம் (மதிய போசனம் காலை 11.00 மணி)

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குபற்றிப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

77/2, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இங்ஙனம், குடும்பத்தினர்.

(சி-1038)

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கட்டப்பிராய் விளையாட்டரங்கு வீதியில் மூன்று அறைகள், குளியலறை வசதிகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு:
0776327662
0774372044

(சி-1043)

R.V.A INTERNATIONAL MARRIAGE BUREAU

வெளிநாட்டில் வசிக்கும் PR உடைய றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1975–1985க்கு உட்பட்ட ஆண்கள், பெண்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ராஜா மாதா திருமண சேவை
இல.70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
T.P:- 0779564944

(1051)

STUDY IN MALAYSIA

@

Legenda Group of Colleges

DIPLOMA , HIGHER NATIONAL DIPLOMA AND UK DEGREE.

IN

ENGINEERING
Mechanical # Civil # Electrical and Electronic # Mechatronic

BUILT ENVIRONMENT
Quantity Surveying # Construction Management # Building Eng # Architecture

INFORMATION TECHNOLOGY & COMPUTING
Information Tec # Computer science # Computer Eng # Software Eng.

BUSINESS
Business # Management.

ACCOUNTING
Finance # Accounting # Taxation # AIA.

Eligibility.
Minimum ***3 Credits*** in O/L , or ***2 Credits*** in A/L (Conditions applied)

NO - IELTS , Bank Statement & Sponsorship.
&
NO - Additional Charges for, Visa Processing, Hostel & Insurance.

Free counseling with Legenda College recruitment representative.

After completing the 1st year would be able to continue studies in UK, Australia

For further information please contact

MR N.KIRITHRAN 077-9527608 , 031-2231676 (006012-3445505)

E-Mail :- kiri_tharan@yahoo.com ,off-135, Sea Street, Negombo.

Colombo Ads - 0715500842

(சி-1146)

சென்.ஜோண்ஸ் கல்லூரி யாழ்ப்பாணத்தில் கல்விப் பொதுச் சாதாரண, உயர்தரக் கல்விக்கான புலமைப் பரிசில் -2008

(போர்,சுனாமி,வறுமையால் பாதிக்கப்பட்ட மாணவர்க்கு உதவிக் கரம் நீட்டும் புலமைப் பரிசில் திட்டம் – 2008)

★ க.பொ. சாதாரண தரம் 2007 இன் பெறுபேற்று அடிப்படையில் 10 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்ப முடிவுத்திகதி 25.04.2008

விண்ணப்பப் படிவங்களைக் காரியாலயத்தில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப.4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்.

நிர்வாக உத்தியோகத்தர்,
மாணவர் நலன்பேணும் புலமைப்பரிசில் பிரிவு,
சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி-1042)

மரண அறிவித்தல்

திருமதி கல்யாணி பத்மதேவா

(நூலக சேவகர், உப அலுவலகம், பண்டத்தரிப்பு)

சுதுமலை, மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கல்யாணி பத்மதேவா நேற்று முன்தினம் (18.04.2008) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் நடராஜா பத்மதேவா (உத்தியோகத்தர்–யாழ். மத்திய கல்லூரி, அன்பான இயேசு ஜீவ கீதங்கள்) அவர்களின் அன்பு மனைவியும் சரண்யாவின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.04.2008) திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு யாழ் A.O.G சபையால் கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1106)

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.
தொ.பே. 0212223406

தகவல்;
ந.பத்மதேவா (கணவர்)
ப.சரண்யா (மகள்)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.